Not for sale

மார்ச் - ஏப்ரல் 2018

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# இயேசுவை நினைக்க ஒரு காலம்

நீங்கள் ஆயத்தமா? • வேறு நாமம் இல்லை • எண்ணெய் ஊற்றப்பட்ட போது

எஜமானனும் ஆசிரியரிடமும் இருந்து பாடங்கள் • இயேசுவின் கடைசி கேள்விகள்

அப்பம் மற்றும் பாத்திரம் • நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்

நினைவுகூருதலின் கொள்கைகளை கௌரவித்தல்

இயேசுவை நினைக்க ஒரு காலம்

# ஆதியிலே



நினைவுகூருதலின் காலத்தை நாம் நெரு□குகையில், இ□கு பூமியில் நம்முடைய ஆண்டவரின் பற்றிய சிந்தைனைக்கு நம்முடைய எண்ண□கள் அடிக்கடி திரும்புகிறது. அவருடைய இறுதி நாட்களில தீவிரமான சவால்களை சந்தித்தபோதிலும், அவருடைய புறப்படுதலுக்காக தம்முடைய சீஷர்களை ஆயத்தப்படுத்துவதிலே அவர் கவனம் செலுத்தினார்.

*நீ□கள் ஆயத்தமா ?* என்ற கேள்வியோடு இந்த பிரதி துவ□குகிறது. நாம் ஒவ்வொருவரும் இந்த நினைவுக்கூறுதலின் காலத்தை, சுயபரிசோதனையோடும், ஜெபத்தோடும் துவ□க வேண்டும். நாம் அறிந்து செய்த குற்ற□களுக்காக வருந்தி, சீர்பொருந்தவேண்டும். அடிச்சுவடுகளை பின்பற்றுவதற்கு, நம்முடைய வாழ்க்கையில் ஏற்ற மாற்ற□களை கொண்டுவருவதற்கான அர்ப்பணிப்பை பற்றி ஆராய்வதற்கான நம்முடைய முயற்சிகளை வலுப்படுத்தவேண்டும். இரட்சிப்பில் இயேசுவின் ப□களிப்பை புரிந்து கொள்ளுதலின் முக்கியத்துவத்தை *வேறு நாமம் இல்லை* என்ற தலைப்பு பரிசோதிக்கிறது. இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை, அவர் தேவனுடைய குமாரன் என்பதற்கும், முழு மனுக்குலத்திற்கு அவரே மீட்கும் பொருள் என்பதற்கும் சட்டப்பூர்வமான சான்றுகளை, பேதுரு அப்போஸ்தலர், பெந்தெகோஸ்தே நாளுக்கு பின் அவருடைய கருத்துக்களில் யூத தலைவர்களுக்கு பல பாட□களாக கொடுத்தார்.

*நினைவுக்கூறுதலின் இராபோஜனத்திற்குமுன் சீஷர்களோடு, அவர் செய்த கடைசி செயல்களில் ஒன்றான, பாதம் கழுவுதலைப் பற்றி *எஜமானனும் ஆசிரியரிடமிருந்து பாட□கள்* என்ற தலைப்பு விவாதிக்கிறது. மிக கடினமானதும், சக்திவாய்ந்ததுமான பாட□களில் ஒன்றான கிறிஸ்துவை பின்பற்றுபவர்களுக்கு தேவைப்படும் முற்றிலுமான மனத்தாழ்மையைப் பற்றி இயேசு இந்த சம்பவத்திலிருந்துதான் எடுத்துரைத்தார். *இயேசுவின் கடைசி கேள்விகள்* என்ற தலைப்பு அவர் ஊழியத்தின் இறுதி நாட்களில் இயேசு தம்முடைய சீஷர்களிடம் கேட்ட ஏழு சக்தி வாய்ந்த கேள்விகளிலிருந்து பாட□கள் எடுக்கப்பட்டுள்ளது. இயேசுவின் காலத்தில் கேட்கப்பட்ட இந்த கேள்விகள் இக்காலத்திற்கும் பொருந்துவதோடு கூட, சுவிசேஷ யுகத்தின் இறுதி நாட்களில், இயேசுவை அடையாளப்படுத்தும். நம்முடைய ப□கை, தெளிவுப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பையும் நமக்கு வழ□குகிறது. *அப்பம் மற்றும் பாத்திரம்* என்ற தலைப்பு இயேசுவின் பலியின் முக்கியத்துவ□களையும், அவருடைய சீஷர்களோடு அவரின் கடைசி நாட்களும், அதோடுக்கூட குறிப்பாக இந்த நினைவுக்கூறுதலின் அடையாள□களுக்குள் மறைந்திருக்கும் காரண□களை நிழலிடும். பழைய ஏற்பாட்டின் பல சித்திர□களை ஆராய்கிறது. வரு□கால நினைவுக்கூறுதலின் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது.

இயேசுவின் ஊழியத்தில் நான்கு நாட்களுக்கு பின் லாசரை எழுப்பின குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த அதிசயத்தை பற்றி, *நானே, உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்* என்ற தலைப்பு விவாதிக்கிறது. நினைவுக் கூறுதலின் கோட்பாடு களை கௌரவித்தல் என்ற கடைசி தலைப்பு, இயேசுவின் பலியைப் பற்றிய நீதி மற்றும் நேர்மை என்ற இரண்டு கொள்கைகளை ஆராய்கிறது. இயேசு சிலுவையில் தொ□கிய போது விரிவாக மேற்கொள் காட்டிய 22ம் ச□கீதம் மற்றும் ஏசாயாவின் தீர்க்க தரிசன□களுக்கு விசேஷித்த கவனம் செலுத்துகிறது.

ஆண்டவரின் நினைவுக் கூறுதலில் ப□கெடுக்கும் நம்முடைய அனைத்து வாசகர்களும் அதில் ப□கு பெற ஆயத்தமாவதற்கு, ஆண்டவரின் ஆசீர்வாத□களுக்காக, ஹெரால்டு பதிப்பாளர்கள் ஜெபிக்கிறார்கள். இந்த ஒரு வருடமும் இதற்கான வாய்ப்பை பெற்றிருக்கும் நாம் அனைவரும் களிகூர்ந்து அவருடைய இராஜ்யத்தின் ஆசீர்வாத□களை உணரும் வரையில் இடுக்கமான வழியில் தொடாந்து நடப்பதற்கு அவரை பின்பற்றுவோமாக.

**மார்ச் - ஏப்ரல் 2018**

**தொகுதி 100, எண் 2**


**நீங்கள் ஆயத்தமா?** 38
சுயபரிசோதனை

**வேறு நாமம் இல்லை** 41
இயேசுவில் இரட்சிப்பு

**எஜமானனும் ஆசிரியரிடமிருந்து பாடங்கள்** 46
மனத்தாழ்மைக்கொரு எடுத்துக்காட்டு

**இயேசுவின் கடைசி கேள்விகள்** 50
அவரது பார்வையாளரை ஈர்த்தார்

**அப்பம் மற்றும் பாத்திரம்** 55
இயேசுவின் வாழ்க்கையின் அடையாளங்கள்

**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்** 59
குறிப்பிடத்தக்க ஒரு அற்புதம்

**நினைவுகூருதலின் கொள்கைகளை கௌரவித்தல்** 63
ஒருமித்து நினைவுக்கூருதல்

**இன்றைய தீர்க்கதரிசனத்தில்** 68
எருசலேம் யுத்தம்

சுய பரிசோதனை

# நீங்கள் ஆயத்தமா?



"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே." (1கொரிந்தியர் 5:7)

**Kent Humphreys**

சுயபரிசோதனை என்பது ஒருகடினமான வேலை. ஏனெனில், நம்முடைய இடுக்கமான பாதையில் செல்வதை தடை செய்யக்கூடிய அனைத்து குற்றங்களையும், தவறுகளையும் அது வெளிப்படுத்துகிறது. இதற்கு ஆயத்தமாவதற்கு, விசுவாசம், நம்பிக்கை மற்றும் எச்சரிப்புகளுக்கான அடையாளங்களினால் வேத வசனங்கள் நிரப்பப்பட்டுள்ளது. நாம் மேற்கொள்ளக்கூடிய பயணத்தில், உறுதியான நம்பிக்கை பலப்பட்டு, மற்றும் கீழ்படிதலை மேற்கொள்வோம் என்று ஒத்துகொண்டோம்.

இவைகளுக்குள் ஈடுபடுவதற்கு முன் பலர் பூமிக்குரிய தொழில்களை அல்லது மிகவும் சிந்தனையான திட்டமிடுதலுக்கு தேவைப்படும் வர்த்தகத்தை தெரிந்தெடுத்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய நாமும் நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் முழு ஓட்டத்தையும் ஓடுவதற்கான செல்லும் செலவை கணக்கு பார்க்கும் படிக்கு கேட்டுக் கொள்ளப்படுகிறோம். பன்னிருவராக இருந்தபோது, இயேசு ஒப்புக்கொண்ட தம்முடைய வேலையை முடிப்பதற்காக மேற்கொள்ளவேண்டிய பாதையை கவனிப்பதற்கு முன்னதாகவே துவங்கிவிட்டார். "மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள். தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்றார்." (லூக்கா 2:46-49) பலியின் பாதையை சிந்திப்பதற்கு இயேசுவின் மனம் முன்னதாகவே துவங்கியிருந்தது.

நம்முடைய ஆயத்தத்திற்கும் இதே மனப்பான்மை வேண்டும்.(பிலிப்பியர் 2:5)சிலருக்கு இந்த ஆயத்தம் வாழ்க்கையின் ஆரம்பத்தில் துவங்குகிறது. மற்றவர்களுக்கு மிகவும் பின்னர் துவங்கும். ஒரு நீண்ட பயணத்திற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்த ஒரு மனுஷனை பற்றி ஒரு கதை சொல்லப்பட்டுள்ளது. அவரோடிருந்த ஒரு நண்பர், ஆயத்த வேலைகள் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று கேட்டபோது, "நான் என் திசை காட்டி, சில நேச கடிதங்கள் ஒரு வரைப்படம், சில கவிதைகள் மற்றும் ஒரு விளக்கை எடுத்து வைத்திருக்கிறேன் "என்று அந்த மனுஷன் பதில் அளித்தார். இவ்வளவு சிறிய சூட்கேஸில் இத்தனை பொருட்களை நீங்கள் எப்படி வைத்தீர்? என்று கேட்ட போது, அந்த மனுஷன் வைத்திருந்த பைபிளை அவருடைய நண்பரிடம் காட்டினார்.

நம்முடைய பாதங்களுக்கும் தீபம் உண்டு. ரோமர் 12ம் அதிகாரத்தின் துவக்கத்தில், "அப்படியிருக்க, சகோதரரே... உங்களை வேண்டி கொள்கிறேன்" என்று தேவன் நம்மிடம் எதிர்ப்பார்ப்பதை அப்போஸ்தலனாகிய பவுல் மிக தெளிவாக விளக்குகிறார். "வேண்டிகொள்கிறேன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைக்கு, ஒரு வேண்டுகோள் என்ற பொருளை காட்டிலும் கட்டாயமாக என்ற பொருள் பொருத்தமாக உள்ளது. ". அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12:1) சாத்தியமற்ற காரியம், இங்கு கேட்கப்படாமல், நியாயமான காரியத்திற்கு இங்கு வேண்டுகோள் வைக்கப்படுகிறது. ". நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று பவுல் தொடருகிறார். (வசனம் 2) நம்முடைய பிதா, நாம் வெற்றிபெற வேண்டும் என்று விரும்புகிறார்.

## புளிப்பை பற்றிய பிரச்சனை:

அனைவரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்களானோம். பாவத்தை அடையாளப படுத்துவதற்கு தேவன் புளிப்பை பயன்படுத்தினதில், பஸ்கா காலத்தில், எபிரெயர்கள், தங்களுடைய வீடுகளிலிருந்து புளிப்பை அகற்றி சுத்திகரிக்கும்படி சொல்லப்பட்டது. "ஏழுநாளளவும் உங்கள் வீடுகளில் புளித்த மா காணப்படலாகாது; எவனாகிலும் புளிப்பிடப்பட்டதைப் புசித்தால், அவன் பரதேசியானாலும் சுதேசியானாலும், அந்த ஆத்துமா இஸ்ரவேல் சபையில் இராமல் அறுப்புண்டுபோவான். " (யாத்திராகமம் 12:19) இது ஒரு மோசமான நிலைமை நொதித்தல், அழுகுதல் மற்றும் கெட்டுபோவதற்கு ஒத்திருப்பதினால் பலிசெலுத்துவதில் இது தடைசெய்யப்பட்டுள்ளது. சில நேரங்களில் புசிப்பதற்கு ஏற்றதாக இருந்தாலும், தேவன் ஜீவனோடு மட்டுமே தொடர்புடையவராக இருப்பதினால் பலியின் புளிப்பு தடை செய்யப்பட்டது

பலிபீடத்தின் மேல் பலியிடுவதற்கு, தேவனிடம் நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கும் போது, இயேசுவின் இரத்தத்தினால் நம்முடைய பலிகளைஅங்கிகரிக்கப் படுவதற்கு தூய்மைப் படுத்தும்படி கேட்டு கொள்ளப்படுகிறோம். நாம் கிறிஸ்துவின் நீதியின் சால்வைக்குள் இருக்கும் வரையில், அவருடைய இரத்தத்தினால், நாம் நீதிமான்களாக எண்ணப்பட்டு, தேவனுடைய பார்வையில் பாவமற்றவர்களாக காணப்படுகிறோம். (சங்கீதம் 19:7-14)

நாம் புதிய உடன்படிக்கையின் பிரதிநிதிகளாக இருப்போம். இதற்கு தயாரிப்பு தேவைப்படுகிறது. வழிநடத்தும் வார்த்தைகளுக்கு அர்ப்பணிப்பு, அறிவு, மற்றும் கீழ்ப்படிதல் தேவை. நாம் ஆயத்தமா ? நம்முடைய வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் இந்த உலகத்திற்கு நாம் மாதிரிகளாக இருக்க வேண்டும். (1I கொரிந்தியர் 3:1-5) இந்த நினைவுகூருதலின் காலத்தில், நம்முடைய தவறுகளை நன்கு அறிந்து நம்முடைய இருதயங்களில் கறைபடிந்திருக்கும், புளிப்பை துடைத்து சுத்தம் செய்யவேண்டும். நம்முடைய ஆண்டவராம் இயேசுவை போல இருப்பதற்கு நம்முடைய முன்னேற்றத்தை தினமும், ஒவ்வொரு மணி நேரமும், நம்முடைய பரலோக தந்தையால் கவனிக்கப்படுகிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். "நான் ஆயத்தமாக இருக்கிறேனா ?" என்ற கேள்வியை நம்மை நாம் கேட்டு கொள்ளக்கூடிய முழு பொறுப்பை பெற்றுள்ளோம். தேவனுடைய பரிசுத்தவானாக இந்த இடுக்கமான பாதையில் செல்லவேண்டும் என்ற என்னுடைய அர்ப்பணிப்பை நான் நிறைவேற்றிவிட்டேனா ?

## நம்மை பரிசோதித்தல் :

நம்மை பரிசோதிக்கும்படிக்கு பவுல் கேட்டுகொள்கிறார். "ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம். நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்." (1I கொரிந்தியர் 13:4-5) ? நினைவுகூருதல் என்று அழைக்கப்படும் பண்டிகையை துவங்கும்போது, நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி விஷயத்தின் மைய பகுதிக்கு வருகிறார். "ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்." (1கொரிந்தியர் 11:24-26)

27 மற்றும் 28 ம் வசனங்களில், பவுல் அந்த அடையாளங்களின் இருதயத்திற்குள் செல்லுகிறார். இது நினைவுகூருதலின் காலத்தில் மட்டுமே ஒருவர் தன்னை பரிசோதனை செய்ய வேண்டும் என்று கூறப்படவில்லை !ஒரு வேளை இந்த வருடத்தில், நாம் தவறிவிட்டோம் என்று உணர்ந்தால், அந்நேரங்களில், நாம் நேரடியாக கிருபாசனத

தண்டைக்கு சென்று, மன்னிப்பை வேண்டுவதற்கு மட்டும் அல்ல, நம்முடைய ஆண்டவரும் இரட்சகராகிய கிறிஸ்துவின் வழியாக நம்முடைய பரலோக பிதாவின் சித்தத்தின்படி மேற கொள்வதற்கான வலிமையையும் வேண்டி பெற்றுக்கொள்ளவேண்டும்.

தாவீதின் வார்த்தைகளை மீண்டும் வாசிக்கலாம்."என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக." (சங்கீதம் 19:14) நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் இதுவே நம்முடைய ஜெபமாக இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் தளர்ந்து போய் விடக்கூடாது. இயேசு தாமே, நம்மேல் தேவன் கொண்டிருக்கும் அக்கறையைப்பற்றி கூறுகிறார். "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்." (மத்தேயு 10:29-32)

சபைக்கான அழைப்பு கிட்டத்தட்ட இரண்டாயிர வருடங்களாக நடந்து கொண்டு வருகிறது. தேவைப்படும் எண்ணிக்கை எப்போது, நிறைவடையும் என்று பிதா மட்டுமே அறிந்திருக்கிறார். ஆயினும், நாம் சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு நெருங்கி கொண்டிருக்கிறோம் என்பதை நாம் உணரும்போது, காலம் மிகவும் குறைவாக இருப்பதாக தோன்றகிறது. தங்களுடைய ஓட்டத்தை முடிக்க மீதியுள்ளவர்களுக்கு இன்னும் அதிகமான அவசர நிலை உள்ளது. ஆகவே, "நீங்கள் ஆயத்தமா" என்ற கேள்வி கேட்டப்படுகிறது. இந்த ஒரு அவசர நிலையை பற்றிய சிறந்த எடுத்துக் காட்டுகளில் ஒன்றை மத்தேயு கூறுகிறார். இயேசுவின் இரண்டாம் பிரசன்னத்தின் காலத்தில் (மத்தேயு 25:1-13) நெருக்கமான பாதையில் செல்லும்போது, அவசரம் அல்லது துரிதத்தின் அவசியத்தை, பத்து கன்னிகளின் உவமையில் மிக தெளிவாக காட்டப்படுகிறது. தேவையான பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்தும், எண்ணெயை தங்களுடைய தீவட்டிகளில் எடுத்து கொள்ள புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள், இருவருக்கும் ஒரே வாய்ப்பும், காலமும் கொடுக்கப்பட்டது. மனவாளன் வரும் நேரத்தை அவர்கள் அறியாததினால், பத்து கன்னிகைகளும், நித்திரை மயக்கம் அடைந்தார்கள் எழுந்திருப்பதற்கான நேரம் வந்தபோது, புத்தியுள்ளவர்கள் மட்டுமே ஆயத்தமாக இருந்தார்கள். அவருடைய பிரசன்னத்தை பற்றி இரு வகுப்பாரும் கேள்விப் பட்டிருந்தாலும், புத்தியுள்ளவர்கள் மட்டுமே திருமணத்திற்கு செல்ல ஆயத்தமாக இருந்தார்கள்.

இந்த இடுக்கமான பாதையில் நடப்பதற்கு அறிவு மிக அவசியம். எனினும் நம்முடைய தீவட்டிகள் நிரம்பி வழிவதற்கு ஒழுக்கம், கீழ்படிதல் தேவைப்படுகிறது. இந்த நெருக்கமான பாதையில் செல்வதற்கு நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படும் காரியங்களை குறித்து அப்போஸ்தலராகிய பவுல் என்ன கூறுகிறார் ? 1கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் அன்பைப் பற்றி அவரது ஆய்வுகளில், நம்முடைய நடையை நிறைவு செய்வதற்கு அறிவோடு கூட தேவைப்படும் முக்கிய படிகளை அவர் வரிசைப்படுத்துகிறார். "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ள வனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை." (1கொரிந்தியர்13:1-3)

இந்த நினைவுகூருதலின் காலத்தில், நம்முடைய நடையின் ஒவ்வொருபடிகளிலும், இயேசுவை நம்மோடு வைத்திருக்கிறோமா என்று நம்மை நாம் சுயபரிசோதனை செய்து, "நான் எச்சரிப்பாக நடந்தேனா? ", "எந்த விதத்திலாவது நான் சகோதரரை காயப்படுத்தினேனா?", "விசுவாசிகளுக்கு நான் மாதிரியாக இருந்தேனா , எல்லா சூழ்நிலைகளிலும், என்னை நான் ஒழுங்காக கையாண்டேனா?" "என்னுடைய ஒவ்வொரு அசைவையும் இயேசு கண்காணித்து கொண்டிருக்கிறார் என்று நான் உணர்ந்திருக்கிறேனா ?" இறுதியாக, "நான்ஆயத்தமாக இருக்கிறேனா ? என்ற கேள்விகளை நம்மிடம் கேட்போமாக.

இயேசுவில் இரட்சிப்பு

# வேறு நாமம் இல்லை



"அப்பொழுது பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே, பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானனென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக் கேட்டால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்துஎழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது.வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்." (அப்போஸ்தலர் 4:8-12)

**Ernie Kuenzli**

பேதுருவின் வார்த்தைக்கான பின்னணி, அப்போஸ்தலர் 3ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. பெந்தெகொஸ்தே நாள் முடிந்த சில நாட்களுக்கு பின் பேதுருவும் யோவானும் ஆலயத்திற்கு சென்றபோது, அங்கு பிறவி முடவன் ஒவருர் பிச்சை கேட்டு கொண்டிருந்ததை அவர்கள் கண்டார்கள். நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால், பேதுரு அந்த மனுஷனை சொஸ்தப்படுத்தினார். அந்த மனுஷன் நடந்துகொண்டும், குதித்துகொண்டும் தேவனை துதித்து கொண்டும், பேதுருவையும், யோவானையும் தேவாலத்திற்குள் பின்தொடர்ந்தான். அந்த மனுஷன் நடப்பதை கண்ட அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். சாலோமோன் மண்டபத்தில் அனைவரும் கூடினார்கள். அங்கு பேதுரு பெரிய தீர்க்கதரிசியாகிய மோசேவினால் வாக்களிக்கப்பட்ட, இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் இயேசுவின் மூலமாக சகல காரியங்களும் சீர் பொருந்தப்படுவதை பற்றி போதித்தார். பேதுரு மற்றும் யோவானின் பிரசங்கத்தினால், யூத மத அதிகாரிகளின் அமைதி சீர்குழைந்தது. ஆகவே இவர்களை சிறையில் தூக்கிபோட்டார்கள். மறுநாளில் இவர்கள் எந்த வல்லமையினாலும், எந்த நாமத்தினாலும் அந்த மனுஷனை சொஸ்தப்படுத்தினார்கள் என்பதை விசாரிக்கும்படிக்கு பேதுருவும் யோவானும் மத தலைவர்கள் முன் கொண்டு வந்தார்கள். மேற்கூறப்பட்ட வார்த்தைகளினால், பேதுரு பதில் அளித்தார். இதில் பேதுரு, யூத மத அதிகாரிகளுக்கு நான்கு முக்கியமான பாடங்களை கற்றுகொடுத்தார்.

* தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

*முடவனான மனுஷன் சுகம் பெற்ற காரியம், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு உறுதியான சான்று.

*இயேசுவை மேசியாவாக புறக்கணித்த போதிலும், தேவன் கட்டக்கூடிய ஆவிக்குரிய ஆலயத்திற்கு இயேசுவே மூலைக்கு தலைக்கல்லானார்.

*இயேசுவை அல்லாமல் - இரட்சிப்படைவதற்கு வேறு எந்த வழியும் இல்லை.

**இயேசுவின் உயிர்த்தெழுதல்**

பேதுருவின் முதல் பாடம், இயேசுவின் உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தியது. பேதுருவின் பதில், அவருடைய செய்திகள் மற்றும் அவருடைய வேலைகள் அனைத்துமே, இயசே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார், என்ற மைய்ய பொருளை கொண்டதாக இருந்ததது. இதினிமித்தமாக பேதுரு யூத மத தலைவர்களிடம் நேரடியாக சவாலிட்டார் -

* நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவே, மேசியா என்று இயேசுவின் மரணத்திற்கான பொறுப்பை அவர்கள் மேல் சாட்டினார்.

*இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பினதாலே, தேவன் அவர்களின் எதிர்ப்பின் மேல் வெற்றி பெற்றார் என்று கூறினார்.

*தைரியமாக பேதுரு யூத அதிகாரிகளை, மேசியாவை கொலை செய்தவர்கள் என்றும் தேவனுக்கு எதிராளிகள் என்றும் கூறுனார்.

பெந்தெகொஸ்தே நாளுக்குபின் இது மூன்றாவது முறையாக, பேதுரு இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்தார். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில், இந்த கோட்பாடு மிகவும் அடிப்படையானது. இயேசுவின் ஈடுபலியின் அங்கீகரிப்பை இது நிரூபிக்கிறது. மேலும் பிரேதக் குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும் என்ற அனைவருக்குமான நம்பிக்கையை இது தருகிறது. (யோவான் 5:28,29) "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை

அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." என்று ரோமர் 4:25ம் வசனம் கூறுகிறது. இயேசு உயிர்த்து எழுப்பட்டாலும், நம்முடைய சார்பில் இயேசுவின் பலியின் புண்ணியங்களை, உபயோகப்படுத்தாவிட்டால், தேவனுடைய பார்வையில் நாம் சரியானவர்களாக, நீதிமானாக்கப்பட முடியாது. ஜீவனுள்ள இயேசு மட்டுமே, தன்னுடைய சொந்த வாழ்க்கையின் மதிப்பை பயன்படுத்த முடியும்.

**மனுஷன் குணப்படுத்தல் – இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு ஆதாரம் :**

முடவன் சொஸ்தமாக்கப்பட்டது. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு உறுதியான ஆதாரம் என்பதே பேதுருவின் இரண்டாம் பாடமாக இருந்தது. இயேசு மரிப்பதற்கு முன் "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." (யோவான் 16:7) என்ற அவர் கூறினார்.

பேதுருவின் குணப்படுத்தும் வல்லமைக்கு அடையாளமாக அவர் தேற்றவாளனாகிய பரிசுத்த ஆவியை பெற்றிருந்தார். "பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள்." (அப்போஸ்தலர் 4:33) பரிசுத்த ஆவி மிக பெரிய சக்தியாக இருந்தது. இது அப்போஸ்தலர்களுக்கு சக்தியையும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கக்கூடிய வாய்ப்பையும், வியாதியஸ்தரை குணப்படுத்துவதினால், வருங்காலத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் இராஜ்யத்தின் நன்மைகளை செயல்படுத்தி காண்பித்தது.

பாவத்தினால் முடமான மனித குடும்பத்தை, இந்த முடவன் அழகாக சித்தரிக்கிறார். தேவபுத்திரர் வெளிப்படுவதற்காக இவர்கள் அறியாமையிலேயே காத்து கொண்டிருக்கிறார்கள். (ரோமர் 8:19) கிறிஸ்துவை அடையாளப்படுத்தும் போது மற்றும் யோவான் பொன், வெள்ளியோடும் காணப்படாமல், இயேசுவின் பலி மற்றும் உயிர்த்தெழுதலினால் பெற்ற தேவ வல்லமையோடு காணப்பட்டார்கள். இந்த வல்லமை, முடவனாக இருந்த அந்த மனுஷனை ஆலயத்திற்கு நடக்கும்படிக்கு அவரை உயர்த்தியது. அதேபோல மனுக்குலம் தேவனிடத்திற்கு வழிநடத்தும். பரிசுத்தமான பெரும்பாதையில் நடந்து செல்லும்படிக்கு உயர்த்தப்படுவார்கள். (ஏசாயா 35:8)

**தலைக்கு மூலைகல் :**

இயேசு தாமே மூலைக்கு தலைக்கல்லானார் என்பதே பேதுருவின் மூன்றாம் பாடமாக இருந்தது. இவர் சங்கீதம் 118:22-23ம் வசனத்தை "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது." மேற்கோள் காட்டினதால், இந்த குறிப்பு யூத தலைவர்களுக்கு பழக்கமானதாக இருந்திருக்க வேண்டும். மரிப்பதற்கு முன் இயேசு தீர்க்கதரிசனத்தை யூத தலைவர்களிடம் மத்தேயு 21:42-44ல் கூறினார்.

"அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? " (43)

"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. " (44) தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்.

இயேசு, தம்மையே ஒரு மூலைக் கல்லாக விவரித்திருக்கிறார். இவரை அல்லாமல் யூத தலைவர்கள் இரட்சிப்பை ஏற்பாடு செய்ய முயற்சித்தார்கள். நியாயப் பிரமாணத்தை கடைபிடித்து அதன் மேல் சார்ந்திராமல், இயேசுவை அவர்கள் புறக்கணித்தார்கள். இது இயசேுவின் பலியின் வேலைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு உதவிச் செய்தது. மரண பரியந்தம் அவர் விசுவாசமுள்ளவராக இருந்ததினால் தேவனுடைய ஆவிக்குரிய ஆலயத்திற்கு இயேசுவே மூலைக்கு தலைக்கல்லானார்.

நம்முடைய ஆண்டவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளும் யாவருக்கும் அவர் மூலைக் கல்லானார் என்று பேதுரு கூறினார். (1பேதுரு2:6-8) ஆவிக்குரிய தேவனுடைய இராஜ்யம், தேவனால் விரும்பப்பட்ட ஆவிக்குரிய ஆலயம். (சங்கீதம் 132:13) - சீயோனுக்கு மூலைக்கு தலைக்கல்லானார். நமக்கு இயேசு தேர்ந்தெடுக்கப்பட்ட விலையேறப்பெற்றவரும் ஆனார், அவர் மேல் விசுவாசம் வைத்தால் நாம் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை. ஆனால், விசுவாசியாதவர்களுக்கும், இஸ்ரயேல் வீட்டாருக்கும்

அவர் தடுக்கலின் கல்லும் இடறுதலின் கன்மலையாக இருக்கிறார். (ஏசாயா 8:14)

## கருப்பொருளான வசனம் – அப்போஸ்தலர் 4:12

யூத தலைவர்களுக்கு, பேதுருவின் நான்காவது பாடம் மிக முக்கியமானதும், நம்முடைய தலைப்புக்கு மிக நெருக்கமானதாகவும் உள்ளது. (அப்போஸ்தலர் 4:12) இயேசுவே இரட்சிப்புக்கான ஒரே வழி. மீண்டுமாக பேதுரு யூத தலைவர்களிடம் சவாலிட்டார். மேசியா- இப்போது நீ்கள் கொலை செய்த கிறிஸ்து இயேசுவே - இரட்சிப்புக்கான ஒரே "வழி"! "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்." (அப்போஸ்தலர் 4:12)

இந்த வசனத்தில், நம்முடைய பரலோக தந்தை கொடுத்திருக்கும் இரட்சிப்புக்கான நான்கு கொள்கைகளை பேதுரு பட்டியலிடுகிறார் : (1) இரட்சிப்பின் ஓர் வழி - மீட்கும்பொருள் (2) வானத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஒரே நாமம் - இயேசு (3) இந்த பெயர் ஒரு பரிசு பொருள். (4) நாம் இரட்சிக்கப்படுவதற்கு இதுவே ஒரே வழி.

### (1) இரட்சிப்பின் ஓர் வழி – மீட்கும் பொருள் :

அப்போஸ்தலர் 4:12 ம் வசனத்தில் "இரட்சிப்பு" என்ற வார்த்தை சொட்டிரிய(soteria) என்ற கிரேக்க வார்ததையின் மொழிபெயர்ப்பாகும். (4991) இதற்கு விடுதலை, பாதுகாப்பு, இரட்சிப்பு என்று பொருள். நம்முடைய முதல் பெற்றோர், மரணதீர்ப்பு பெற்றுக்கொண்டனர். அந்நேரத்திலிருந்தே மனுஷன் மரண தண்டனையிலிருந்து தப்பித்து கொள்வதற்கான ஒரு வழியை தேடி கொண்டிருக்கிறான். இதிலிருந்து தப்பித்து கொள்வதற்காக மனதில் தோன்றி சகல வழிகளையும் : பொய் தெய்வ்கள், விதவிதமான மத்கள், வி்்ானம், தத்துவ்கள் மற்றும் கிரியைகள் - தேடினான். எல்லா வழிகளும் தோல்வி அடைந்தது.

தேவனால் அளிக்கப்பட்ட, இயேசுவின் பலியே இரட்சிப்புக்கான ஒரே வழி என்று பேதுரு மற்றும் வசன்கள் மிக தெளிவாக காட்டுகிறது. மனுஷன் பாவம் செய்தபின், தேவன் மனுக்குலத்தை மரணதீர்ப்பளித்தார், அந்த தீர்ப்பிலிருந்து அவர்களை விடுவிக்க, தேவனுடைய நீதி திருப்பதிப்படவேண்டியதாக இருந்தது. இதை செய்வதற்கு ஒரு மீட்கும் பொருள் தேவைப்பட்டது.

ஆதாமின் பாவத்தினால் மனுஷன் மரித்துப் போகிறான். இந்த மரணத்தீர்ப்பை விளக்கிபோடுவதற்கு, ஒருவர் இந்த மரணத்தீர்ப்பில் ஆதாமின் இடத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் - ஒரு மீட்கும்பொருள் அல்லது சரிநிகர் சமமான விலை. 1கொரிந்தியர் 15:21-22 . இதை விவரிக்கிறது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." ஆயினும், "ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி," (ச்கீதம் 49:7) ஆகவே வாழக்கூடிய உரிமையை பெற்றிருக்கும், இந்த இனத்தில் இல்லாத வேறொருவர் இந்த இரட்சிப்பை கொடுக்கவேண்டும். அவர் மரியாளின் பிள்ளையாகவும் இருக்கவேண்டும். தேவன் இதையே துல்லியமாக செய்தார். "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." (ஓசியா 13:14)

### (2) ஒரே நாமம் – இயேசு

அப்போஸ்தலர் 4:12ல் இயேசு என்ற ஒரே நாமம் - ஒரு தனிப்பட்ட நபர் - அவர் ஒருவரே, ஈடுபலியின் பிரமாணத்தை நிறைவேற்றி இரட்சிப்பை சாத்தியமாக்கியது என்று பேதுரு குறிப்பிடுகிறார். அவருடைய நாமம் அவருடைய மதிப்பையும், இரட்சகராக அவர் வகிக்கக்கூடிய ப்கையும்"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்." (மத்தேயு 1:21)

### நிரூபிக்கப்பட்ட ஒரு இரட்சகராக – ஒரு பரிபூரண மகன்

இயேசுவை இரட்சகராக நாம் நினைக்கும்போது, தேவனுக்கு எப்படிப்பட்ட உயர்ந்த நிலையான நீதி தேவைப்படுகிறது என்று நாம் முழுமையாக புரிந்துகொள்கிறோமா ? ஆதாம் பூரணமாக சிருஷ்டிக்கப்பட்டார் ஆனால் கீழ்படிதலுக்கான முதல் சோதனையில் அவர் தோல்வி அடைந்தார். ஆதாமின் பரிபூரணத்தை சோதிக்கும்படியாக தேவன் சாத்தானை அனுமதித்தார். ஆதாம் தோல்வி

அடைந்தார். ஆகவே இயேசு ஆதாமுக்கு ஒரு இரட்சகராக இருப்பதற்கு சாத்தானின் எதிர்ப்பின் மத்தியில் அவர் பரிபூரணத்தை நிரூபிக்கவேண்டியதாக இருந்தது. மனுஷரின் இரட்சகராகுவதற்குமுன் இயேசு ஒரு பரிபூரண மனுஷகுமாரன் என்று நிரூபிக்கப்படவேண்டும். ஒரு பரிபூரண குமாரனாக நிரூபிக்கப்படுவது தேவன் மேல் அவர் கொண்டிருந்த விசுவாசத்திற்கு ஒரு கடுமையான பரிட்சையாக இருந்தது. இதில் அவருடைய இருதயத்தின் நிலை தந்தையை போலவும், தேவனுக்கு முன் அவருடைய தாழ்மை மற்றும் தேவனிடம் அவருடைய அர்ப்பணிப்பும், கீழ்ப்படிதலும் நிரூபிக்கவேண்டியதாக இருந்தது. அவர் மாம்சத்தில் வந்து மரிப்பதை விட மேலானவைகளை செய்ய வேண்டியதாக இருந்தது. சோதனைகள், எதிாப்புகள் மற்றும் உபத்திரவ்ங்களுக்கு மத்தியில் அவருடைய பரிபூரணத்தை நிரூபிக்க வேண்டியவராக இருந்தது. மரண பரியந்தம் அவருடைய உண்மை தன்மையை காத்துகொண்டதால், நம்முடைய இரட்சகராவதற்கு அவர் தகுதிபெற்றார்.

"ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9-11)

## நம்முடைய ஆண்டவரின் மகத்தான பலி :

அவர் தந்த அந்த மகத்தான பலியினால், நம்முடைய ஆண்டவர், நம்முடைய இரட்சகரானார். "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (1பேதுரு 1:18-19)

இயேசுவின் இரத்தம் மிகவும் விலைமதிப்பற்றது ஏன்? ஏனெனில் இயேசு தேவனுடைய பரிபூரணமான குமாரன். ஏனெனில் இயேசு தம் தகப்பனுடனும் அவருடைய சித்தத்துடனும் முழுமையான ஒற்றுமையில் இருந்தார். மற்றும் அவரது பிதாவின் அன்பிற்கும், அவர் மனுக்குலத்தின் மேல் கொண்ட அன்பிற்கும் அவருடைய வாழ்க்கையை தியாகம் செய்ய தயாரானார். எந்த மகனும் இயேசுவை காட்டிலும் தேவனுக்கு இவ்விதமாக அதிக கீழ்ப்படிதலோடும் அல்லது விசுவாசத்தோடும் இருந்திருக்க முடியாது. இதினிமித்தமாகவே, நம்முடைய ஆண்டவருடைய பலி தேவனுடைய பார்வையில் அதிக விலையேற பெற்றதாக உள்ளது.

## ண்வானத்தின் கீழ் தேவனால் வழங்கப்பட்டது:

வானத்தின் கீழ் இயேசுவின் நாமமே அல்லாமல்- என்ற காரியம், தேவன் நமக்கு ஒரு பரிசை வழ்கினார் என்று நினைவுப்படுத்துகிறது. மனுஷனுடைய அக்கிரம்கள் சுமப்பதற்கு, தேவன் எவ்வாறு நம்முடைய ஆண்டவரைகொடுத்தார் என்று ஏசாயா விவரிக்கிறார்.

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."(ஏசாயா 53:4-6)

நம்முடைய அக்கிரம்களுக்காக தேவனால் இயேசு அடிக்கப்பட்டார். நம் அனைவரின் குறிப்பாக ஆதாமின் அக்கிரமத்தையும் தேவன் அவர் மேல் சுமத்தினார் - இது மனித குடும்பத்தை குணப்படுத்தவும் மன்னிக்கவும் தேவனுக்கு இயல செய்தது.

## (3) மனுஷர் மத்தியில் கொடுக்கப்பட்ட – ஒரு மண்ணுலக பரிசு :

மனுஷனுக்காக கொடுக்கப்பட்ட ஒரே நாமம், இயேசு என்ற நாமமே என்று பேதுரு கூறினார். இந்த இரட்சிப்பு பரத்தில் திட்டமிடப்படுகையில், அது பூமிக்கு ஒரு பரிசாக வழ்கப்பட்டது. அதற்கு நம்முடைய ஆண்டவர் மனுஷகுமாரனாக, மாம்சமாக மாற வேண்டியதாக இருந்தது. "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது." (1தீமோத்தேயு 2:5-6)

"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." (மத்தேயு 20:28) இயேசு மனுஷ குமாரனாக மாம்சத்தில் வந்து, எல்லாருக்கும் மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். நமக்கு இந்த பரிசை வழங்குவதற்காக அவர் மாம்சமாக மாறியது, நம்முடைய ஆண்டவரின் மிகுந்த தாழ்மையை வெளிப்படுத்துகிறது. "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."(11கொரிந்தியர் 8:9)"தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:7-8) அவருடைய தாழ்மையான இந்த மனநிலையே, நம் அனைவருக்கும் இருக்கவேண்டும்.

## (4) நாம் எதை கொண்டு இரட்சிக்கப்படுவது

இயேசுவின் பலியின் இலக்கு மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றி அப்போஸ்தலர் 4:12ல் பேதுரு கூறுகிறார். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் வழியாகவே சபை மற்றும் இந்த உலகத்தின் இரட்சிப்பு சாத்தியமானது. காப்பாற்றுவதற்கான ஒரு அவசியம் அல்லது காப்பாற்றப்படுதல் என்று அசல் கிரேக்க வார்தையின் பொருளாகும். இப்போது முழு மனித குடும்பமும், தேவனுக்கு எதிரியாகவும், அந்நியமாகவும் இருக்கிறது. இந்த நிலையிலிருந்த நாம் காப்பற்றப்படவேண்டும், இல்லாவிட்டால் நாம் அழிந்துபோவோம். ரோமர் 5:8 ம் வசனத்தில் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிட்டது போல, தப்பித்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை கொடுப்பதற்கே இயேசு மரித்தார்.

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." (யோவான் 3:17) தேவனோடு இசைந்திருப்பதற்கு நாம் திரும்பி வரும்படியாக, கிறிஸ்துவின் இரத்தம் சபை மற்றும் உலகத்தை நீதிமானாக்குகிறது. அல்லது சுத்திகரிக்கிறது. "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1தீமோத்தேயு 2:4 ) கிறிஸ்துவின் இரத்தம் சாத்தியமாக்கியது. " இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும்;" என்று ரோமர் 11:26ம் வசனத்தில் பவுல் குறிப்பிடுகிறபடி, தேவனுக்கு விரோதமாக கலகம் செய்து, நியாயப்பிரமாணத்தை காத்து நடவாத யூதர்களும் கூட இரட்சிக்கப்படுவார்கள்.

**முடிவுரை:**

இயேசுவின் பலி நமக்கு என்ன பொருள்படுகிறது ?

*வானத்தின் கீழ் நமக்கு இரட்சிப்பளிப்பதற்கு அவருடைய நாமம் மட்டுமே உள்ளது. அவரை நம்முடைய தலையாக அங்கீகரிக்கவும் அவரது கட்டளைகளையும் வழி முறைகளையும் பின்பற்றுவதற்கு இது நம்மை ஊக்கவிக்கிறதா ?

*அவர் ஒரு பரிபூரண குமாரனாக நிரூபித்தார் ! நாம் சிறப்பாய் கீழ்ப்படிந்து, அவரை போல பிதாவுக்கு ஒரு நல்ல மகனாக இருக்க, இது நம்மை ஊக்குவிக்கிறதா ?

*அவர் சிலுவையின் மரண பரியந்தம் தன்னை தாழ்த்தினார் ! இது நம்மை தாழ்மைப்படுத்துமா ?

*அவருடைய மிகுந்த அன்பினால், அவர் சகலத்தையும் பணயம் வைத்து, நமக்கு ஜீவனை அளிக்க, அவருடைய அனைத்தையும் கொடுத்தார். நாம் அவர் மேல் வைத்த அன்பை வெளிப்படுத்த அவருக்காகவும், நம்முடைய சகோதரர்களுக்காகவும், நம்முடைய ஜீவனை கொடுக்க தயாராக உள்ளோமா?

அவருடைய மகத்தான பலியையும், அவர் சிந்தின இரத்தத்தையும், இவைகளை நமக்குள் தூண்டிய அன்பையும், நாம் தொடர்ந்து பொக்கிஷமாக்கிகொண்டு, வானத்தின் கீழ் இரட்சிப்பை சாத்தியமாக்குவதற்கு, இயேசுவின் நாமம் மட்டுமே என்பதை உணர்ந்துகொள்ளலாம். நம்முடைய மீட்பரும், ஆண்டவரும், எஜமானனுமாகிய அவருக்கு எல்லாவற்றிலும் கடன்பட்டிருக்கிறோம் என்பதை நாம் தொடர்ந்து அங்கீகரிப்போமாக.

மனத்தாழ்மைக்கான ஒரு மாதிரி

# எஜமானனும் ஆசிரியருமானவரிடமிருந்து பாடங்கள்



"நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான்." (யோவான் 13:13)

அவரது கடைசி பஸ்கா பண்டிகை கொண்டாடப்படுவதற்கு முன் இயேசு நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தை கூறினார். "Master" என்ற ஆங்கில வார்த்தைக்கு, பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையின் பொருள், கற்பிப்பவர் மற்றும் சில நேரங்களில் "போதகர்" என்றும் காண்பிக்கப்பட்டுள்ளது. யோவான் 13:13ல் இயேசுவை நம்முடைய போதகர் என் குறிப்பிடுகிறது. இதனால் இயேசு நம்முடைய போதகராகவும், கற்பிப்பாளருமாக கருதுவது பொருத்தமாக உள்ளது.

இயேசு புறப்படக்கூடிய காலத்தை அறிந்திருந்தினாலும், அவருடைய மரணம் அருகில் வந்ததாலும், இயேசுவின் சீஷர்கள் இந்த உலக மதிப்புக்கும், மரியாதைக்கும் அதிக ஈடுபாட்டை காட்டினதால் அவருடைய சீஷர்களுக்கு மனத் தாழ்மையை பற்றின ஒரு பாடத்தை கற்பிப்பது ஏற்தாக இருக்கும் என்று அவர் சிந்தித்தார்.

ஒரு வாரம் முன்பு இராஜ்யத்தில் இயேசுவின் நெருங்கிய உறவாக ஒருவர் வலது பக்கமும், ஒருவர் இடது பக்கமும் அமருவதற்கு, யாக்கோபும் யோவானும் வேண்டிகொண்டனர். குழந்தைகளை போல தாழ்மையுள்ள ஆவியை பேணி, வளர்த்து, கொள்ளாவிட்டால், அவருடைய இராஜ்யத்தில் பங்கில்லை என்று இயேசு சீஷர்களை கடிந்து கொண்டார். ஒரு வேளை மேல்வீட்டு அறையில், இராபோஜனத்தின்போது ஒரு பெருமையின் ஆவி இன்னும் உலாவிகொண்டிருந்திருக்க வேண்டும். (லூக்கா 22:24)

முற்காலங்களில், விருந்தினருக்கு, கால்களை கழுவிவிடுதல் ஒரு பழக்கமாக இருந்தது. ஆனால் பின்னர் பணியாளர்களுக்கு அந்த கடமை கொடுக்கப்பட்டதினால், அது பணிவிடை நியமனம் என்று கருதப்பட்டது. தாவீது தன்னுடைய ஊழியக்காரர்களை அபிகாயேலிடம் அனுப்பி, அவளை அவர் மனைவியாக ஏற்றுகொள்ளும் செய்தியை கூறியபோது," அவள் எழுந்திருந்து தரைமட்டும் முகங்குனிந்து, இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள் என்றாள்.." (1சாமுயேல் 25:41) என்று கூறினாள்.

இயேசு இந்த செயலை நடப்பித்தபோது, இது ஒரு ஊழியக்காரரின் கடமையாக இருந்தது. இது தெளிவாக இயேசுன் மனத்தாழ்மையை காட்டியது. மற்றும் உறுதியுடன் இதே காரியத்தை அவருடைய சீஷர்களுக்கு போதித்தார். அவர்களின் போதகரின் வார்த்தைகளை கணிப்பதற்கு மட்டும் அல்ல, அவருடைய செயல்களை கணிப்பதும் கடினமாகவே இருந்தது.

இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்றும் மேசியா என்றும் அவர்களுடைய ஆண்டவரும் போதகரும் என்று ஒப்புகொண்டார். ஆயினும், அங்கு அவர் சீஷர்களுக்கு முன் ஒரு தாழ்மையான ஊழியக்காரராக முழங்காலிட்டு, அவர்களுடைய பாதங்களை கழுவினார். அதிர்ச்சியடைந்து, வாய்டைத்துபோன சீஷர்கள், இயேசுவுக்கு கீழ்ப்படிந்து பழக்கப்பட்டதினால், எந்த ஒரு எதிர்ப்பும் அங்கு வெளிப்படவில்லை. "இல்லை !இல்லை! நீங்கள் இதை செய்யக்கூடாது ! உங்களுக்கு நான் செய்கிறேன்" என்று ஒருவரும் முன் வரவில்லை.

ஆயினும், இது அவமானம், குற்றவுணர்வு அல்லது சில சங்கடமான உணர்வுகளை அவர்களுக்குள் உருவாக்கியிருக்கவேண்டும். அவர்களுடைய சொந்தபாதங்களை அவருடைய கரங்கள் தொடுவதை உணரும் வரையில், அவர் தங்களை நெருங்கி வருவதை கவனித்து கொண்டிருந்தார்கள். ஆனால் இவை அனைத்தும் ஒரு பதட்டமான அமைதியில் நடைபெற்றது. ஒருவரும் பேசவில்லை.

பொதுவாக சீமோன் பேதுரு உணர்ச்சிவசப்பட கூடியவர். நம்மில் சிலரை போல அவர் ஒருபோதும் நாவை அடக்கவில்லை. அவருடைய மனதில் இருந்ததை வாய்பேசியது.

முதலில் அவர் இதை பார்த்து அதிர்ச்சி அடைந்து ஆச்சரியப்பட்டார். அதற்குபின்-. "ஆண்டவரே என்னுடைய கால்களையும் கழுவுவீர்களா ? என்று கேட்டார். ஒரு வேளை இந்த கேள்வியை கேட்டு கொண்டே பேதுரு தன்னுடைய கால்களை மடக்கியிருக்கவேண்டும். ஆனால்"அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இன்மேல் அறிவாய் என்றார். " (யேவான் 13:6,7) என்று இயேசு பதில் அளித்தார்.

## கடினமான பாடங்கள்:

சில நேர களில் நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவர் நமக்குமுன் வைக்கும் காரிய களை புரிந்துகொள்ள கடினமாகவும், தெய்வீகமாக தோன்றாததைபோல் இருப்பதையும் நாம் ஒப்புகொள்ளவேண்டும். இருப்பினும், நம்முடைய ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ள நாம் கற்றுகொண்டு நாம் புரிந்துகொள்ள இயலாத போதிலும், நம்முடைய விவகார களை ஒழு குப்படுத்துவதை நியாயமானதாகவும், ானமானதாகவும் எற்றுகொள்ளவேண்டும். இயேசு பேதுருவிடம் கூறினது போல இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாமும் உணருவதற்கு உதவி செய்கிறது. நாம் குழப்பம் அடைந்திருக்கிறோம் என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆனால் அதற்காக அவர் கோபம் கொள்ளவில்லை.

எடுத்துகாட்டாக, நேசிக்கப்பட்ட ஒருவர் ஏன் மரிக்க வேண்டும் என்பதையும் அல்லது நம்முடைய ஊழியத்திற்கு தடையாக அனுமதிக்கப்படும் ஒரு வலி, ஒரு வியாதி அல்லது மற்றகாரிய களை புரிந்துகொள்வது எப்போதும் எளிதல்ல. ஒருவரின் கவனக்குறைவுக்கு, அப்பாவியாகிய நாம் ஏன் பாதிக்கப்படவேண்டும்; சரியான இடம் என்று நாம் நினைத்தாலும், நமக்கு ஏன் அந்த வேலை கிடைக்கவில்லை; சகோதரர்களுடனான ஐக்கியத்திற்கான வாய்ப்பு எடுக்கப்படுகிறது. நாம் நன்கு அறிந்த வர்களும், நேசித்தவர்களும், பல வருட களாக மதித்தவர்களுமாகிய சகோதரர்களிடமிருந்து ஏன் பிரிக்கப்படுகிறோம் ; அல்லது நாம் அனைவரும் வேத விளக்க களை ஏன் ஒத்துகொள்கிறதில்லை.

இப்போது நாம் குழப்பத்திலிருந்தாலும், ஒரு நாள் எல்லாவற்றையும் தெளிவாக புரிந்துகொள்வோம். ஆனால் இது நம்முடைய தற்போதைய கவலையை விடுவிக்க முடியாது. இப்போது, நம்முடைய வாழ்க்கையில் பிணைக்கப்படும் மாதிரி வடிவமைக்கப்படும். கடைசியாக நாம் அதை புரிந்துகொண்டு, "ஓ இதற்காக தான் இது நடந்தது" என்று கடைசியக நாம் அதை புரிந்துகொண்டு பறைசாற்றுவோம். அதற்குபின், சில ஆன்மீக இழப்புகளை தவிர, அனுப்பப்பட்டவைகளில் ஒன்றையும் நாம் தவிர்த்திருக்க முடியாது என்பதை நாம் புரிந்து கொள்வோம். கிறிஸ்துவை நாம் கண்டுபிடிக்க இயலாதபோது, அவர்மேல் விசுவாசம் கொண்டவர்களாக அவரை நம்பவேண்டும். "நான் காண்பதினால் அல்ல, விசுவசாத்தினால் நடக்கிறேன்" என்ற பிரபலமான பாடலை பாடு கள்.

## அப்போஸ்தலர்களின் எதிர்செயல்:

"பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றான்." (யோவான் 13:8) என்று பேதுரு ஆரம்பத்தில் மறுத்தார். அது உறுதியாக தீர்மானிக்கப்பட்ட ஒரு மொழியாக இருந்தது. ஆயினும், பாத களை கழுவாவிட்டால், இயேசுவினிடத்தில் ப கில்லை என்று ஒருமுறை சொல்லிவிட்டார். பேதுரு உடனடியாக மனதை மாற்றிகொண்டு, தம்முடைய தலையையும், கைகளையும் கழுவும்படி கேட்டுகொண்டார்.

பாதம் கழுவுதல் முடிவடைந்தபோது, இயேசு அதன் முக்கியத்துவத்தை விவரித்தார். அவர் மிகவும் நேசித்தவர்களுக்கு, தாழ்வான ஊழியத்தையும் செய்யும்படி அவர் தன்னை ஆயத்தப்படுத்திகொண்டு, மனத்தாழ்மை என்பதற்கான ஒரு மாதிரியை அவர்களுக்கு கொடுத்தார். இவர்கள் குறைவானவர்கள் என்று வலியுறுத்தப்பட்ட பயத்தினால், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவேண்டும் என்ற முக்கியத்துவத்தை அவர்கள் தவற விட்டார்கள். இப்படிப்பட்ட மற்ற பாட கள், பரிசுத்தஆவியுடன் வந்து, அவர்களுக்கு போதிக்கும். (யோவான் 14:26)

அவர்களுடைய ஆண்டவரும், எஜமானனும், தலையாக இருக்கிறவர், தன்னையே தாழ்த்தி அவர்களுக்கு ஊழியம் செய்து, அவர்களின் பெருமையை கடிந்துகொண்டார். அவர்கள் த□ களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு விவகார□ களிலும், பயன்படுத்துவதற்கு ஏற்றபடி ஒரு மாதிரியை முன்வைத்தார்: ஒவ்வொரு சரியான சந்தர்ப்ப□ களிலும், உயர்வான காரிய□ களானாலும் அல்லது வாழ்க்கையின் பொதுவான விவகார□ களிலும் ஒருவரை ஒருவர் சேவிப்பதில் மகிழ்ச்சி அடையவேண்டும்.

**கால்களை கழுவும் வாய்ப்புகள்:**

ஒருவரின் கால்களை ஒருவர் கழுவுதல் என்பது ஒரு கருத்தாகும். இதை நாம் வாழ்க்கையின் ஒவ்வொரு சேவைகளிலும், ஒவ்வொருவருக்கும் தயவாக, செய்யலாம். ஆனால், இது ஆவிக்குரிய உதவியையும், ஆறுதலையும் அளிக்கும் போது தனிச்சிறப்பாக பொருந்தும்.

சில தாழ்மையான காரிய□ களிலும், சில விரும்பதகாத பணிகள் அல்லது சோதனைகளிலும், ஒருவருக்கொருவர் ஆறுதல் அளிக்கவும், புத்துணர்வூட்டவும் எப்போதும் வாய்ப்புகள் உண்டு. தேவனுடைய ஜன□ களில் ஒருவருக்கு நல்லது செய்யவிருப்பம் கொண்டு, அன்பினால் எந்த செயல் செய்யப்பட்டாலும், அல்லது செய்ய முயற்சித்தாலும், நிச்சயமாக நாம் கடவுளின் அ□ கீகாரத்தையும் ஆசீரையும் அடைவோம். நாம் எந்த வாய்ப்பையும் கைவிடவேண்டாம். நம்முடைய எஜமானனும், போதகருமாயிருப்பவரின் மாதிரியை நினைத்துகொள்ளு□ கள். நாம் ஒருபோதும் போலியான மனத்தாழ்மை கொண்டவர்களாக இருக்கலாகாது. மாறாக, நாம் தேவனை சேவிக்க விரும்பினால், நாம் அன்புடன் நடந்துகொள்வதே சரியான காரியமாகும். கர்த்தருடைய சரீர அ□ கத்தினர்களுக்கு உதவி செய்வதை ஒரு சிலாக்கியமாக எப்போதும் எண்ணவேண்டும்.

ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுவதற்கு, ஒருவருடைய நன்மைகளை ஒருவர் கருதி, அன்பை காட்ட தரைமட்டும் குனிய வேண்டும். கிறிஸ்துவின் பள்ளியில் நாம் வளர்ச்சி அடைய, இந்த காட்சியில் நம்மை மிகவும் தாழ்த்தவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை அனைவருக்கும் அடிமையாக்கினார். (மாற்கு 9:35) இயேசு ஊழியம் கொள்ளவராமல், ஊழியம் செய்யவந்தார். (மத்தேயு 20:28)

சகோதரர்களின் நன்மையை கருதி, நம்மை நாம் குறைத்துகொண்டு, இந்த மாதிரிகளை நாம் முழு விருப்பத்துடன் பின்பற்ற வேண்டும். பண்டைய காலத்தில், நீண்ட பயணத்திற்கு பின் கால்களை கழுவுதல், சுத்திகரிப்பையும், ஆறுதலையும் அளித்தது. அதேபோல நம்முடைய ஆவிக்குரிய கால்கழுவுதலும், நம் சகோதரர்களின் ஆன்மீக சுத்திகரிப்பை முன்னேற்றுவதற்கும், நலன்புரியவும், உதவுகிறது.

"இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்." (யோவான் 13:10) என்று இயேசு கூறினார். நீதிமானாக்கப்பட்டு, சரீர அ□ க□ களாக அர்ப்பணித்தவர்கள், முன்னதாகவே மறுப்பிறப்பின் கழுவுதலை பெற்று, அவர்களிடம் பேசப்பட்ட வார்த்தைகளினால் அவர்கள் சுத்திகரிக்கப்பட்டார்கள். (யோவான் 15:3) இந்த உலகத்தில் நாம் தொடர்பு வைத்திருக்கும் வரை அதன் அசுத்தத்தினால் ஒரு குறிப்பிட்ட அளவு பாதிக்கப்படுகிறோம் என்று நாம் சந்தேகப்படுகிறோம். இது நம்மில் ஒவ்வொருவரையும் கருத்தில் கொள்வதற்கு மட்டும் அல்லாமல், ஒருவருக்கொருவர் பூமிக்குரிய அசுத்த□ களை நீக்க உதவி செய்கிறது.

ஒவ்வொருவரையும் சுத்தமாகவும், பரிசுத்தமாகவும், தூய்மையாகவும் காத்துகொண்டு, சந்திக்கக்கூடிய சோதனைகளையும், பிரச்சனைகளையும் மேற்கொள்வதற்கான உதவி செய்வதற்கும், நாம் ஒவ்வொருவரும் மற்றொரு நலனின் மேல் பரஸ்பர பார்வையை வைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். "ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியுஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே."(எபிரெயர் 6:10)

யோவான் 13ம் அதிகாரத்தின் முதல் வசனம், நம்முடைய ஆண்டவரின் அன்பின் பக்கமாக நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது. இந்த அன்பே,

"அவருக்கு சொந்தானவர்களின்" அனைத்து நடவடிக்கைளுக்கும் அடிப்படையானது. இந்த அன்பின் நிமித்தமாக, லோகாஸாக இருந்தபோது அவருடைய மகிமையை ஒதுக்கி வைத்துவிட்டு, மனுஷனாக வந்தார். அவருடைய அன்பின் நிமித்தமாக, பிதாவின் சித்தம் செய்ய, தன்னை ஒரு மனுஷனாகிய இயேசுவாக தத்தம் செய்தார். மேலும், அவருடைய அன்பின் நிமித்தமாக அவருடைய சீஷர்களின் முன்னேற்றத்தை தடுக்கும், பெருமையை கட்டுபடுத்த அவர்களுக்கு உதவி செய்ய ஆவள்ளலவராக இருந்தார்.

இந்த அன்பு தேவைப்படும்போதெல்லாம் அவர்களை கண்டனம் செய்வதற்கு மட்டும் வழிநடத்தாமல், மிகுந்த அன்பில் அதை செய்ய அவரை ஏவியது. " நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். " (யோவான் 13:15-17)

உண்மையில், கிறிஸ்து நம்முடைய எஜமானனும், போதகருமானவர். அவர் தம்முடைய வார்த்தைகளினாலும், மாதிரிகளினாலும் நமக்கு கற்பிக்கிறார். இதற்காகவே அவர் இந்த உலகத்திற்கு வந்து, ஆவிக்குரிய கனிகளையும், இரக்க களையும் காண்பிக்கும்படியாகவே, நம்மத்தியில் வாசம் செய்தார். இவைகளில் அவருடைய சீஷர்களும் விருத்தி அடைய விரும்பினார். எந்தவிதமான தவறுகளும் நம்முடைய ஆண்டவரின் மாதிரியில் இல்லை.நாம் அவருடைய வார்த்தைகளை கேட்டால் மட்டும் போதாது. அவருடைய மாதிரியையும் நாம் பின்பற்றி, முற்றிலுமாக அவருடைய சாயலுக்குள் உறுதிப்படவேண்டும்.

அவரது பார்வையாளரை ஈர்த்தார்

# இயேசுவின் கடைசி கேள்விகள்



"அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை." (மத்தேயு 22:46)

**Todd Alexander**

ஒவ்வொரு அப்போஸ்தலர்களுக்குள் வளர்ச்சி அடையக்கூடிய விசுவாசத்தை சுத்திகரிக்கக் கூடியதும், ஆற்றல் வளம் கொண்ட சீஷர்களின் மனதை திருப்பக்கூடியதும், பரிசேயரை அமைதிப்படுத்தக்கூடியதுமான ஒரு சக்திவாய்ந்த கேள்வி, இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திலிருந்தே கேட்கப்பட்டது. அவருடைய கடைசி வாரத்தில், பிந்தய காலத்தில் அப்போஸ்தலர்கள் மட்டுமே உணர்ந்துகொள்ளும்படியாக, இயேசுவின் கேள்விகளில் ஒரு அவசரம் காணப்பட்டது.

இன்று, சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கும், கடவுளின் சுத்திகரிக்கும் வல்லமைக்கு நம்மை அர்ப்பணித்து, உயிர்த்தெழுந்த ஆண்டவரோடு மற்றொரு நினைவுகூருதலை ஆசரிக்க, ஆர்வத்தோடிருக்கும் நமக்கும் இயேசுவின் கடைசி கேள்விகள், விசேஷித்த அர்த்தமுள்ளது தான்.

பூமியில் அவருடைய கடைசி வாரம் நெருகுங்கையில், அவர் எருசலேமுக்கு எப்படி போகவேண்டும் என்றும், அங்கு அவர் பாடுப்படவும், கொல்லப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும் என்றும் இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார். (மத்தேயு 16 :21-24) இந்த இரண்டு கருத்துக்களும் சீஷர்களுக்கு அந்நியமாக (விநோதமாக) தோன்றியது. இதை கேட்ட பேதுரு இயேசுவை கடிந்து கொள்ள தொடங்கினார். இப்படியாக-தங்கள் மாம்சத்தை வெறுத்து, சிலுவையை சுமந்து , அவரை பின்பற்றவேண்டும் என்ற புதிதான ஒரு வாழ்க்கை முறையை சீஷர்களுக்கு அவர் அறிமுகப்படுத்தினார்.

இதுகாறும், அப்போஸ்தலர்கள் இயேசுவை ஒரு போர்வீரராகவும், அற்புதங்களை செய்பவராகவும் கண்டார்கள். - தீர்க்கதரிசன நிறைவேற்றத்தின் முக்கியமான இரண்டு கூறுகள். தான் மரிக்கவேண்டும் என்று இயேசு கூறியபோது, அவர்களால் அதை புரிந்துகொள்ளமுடியவில்லை. கடைசி வாரத்தின் போது, சீஷர்களின் இருதயங்களில் தொடர்ந்த நிச்சயமற்றவைகள், அவர்களுடைய வருங்கால விசுவாசத்திற்கு ஒரு நல்ல அடித்தளத்தை உருவாக்கியது. அவர்கள் இயேசுவுக்கு நடந்ததையும், அவர்களுடைய போதகரை பற்றி முன்னதாகவே அவர்கள் புரிந்துகொண்டதையும் பொருத்தி பார்க்கவேண்டியதாக இருந்தது. அதிகமாக செலவழித்தாலும் (இழந்தாலும்) அவர்களின் விசுவாசம் விரைவாக வளரும். அவர்களுடைய போதகராக இருந்த இயேசு அவர்களின் இரட்சகராக மாற போகிறார்.

### அப்போஸ்தலர்களுக்கான கேள்விகள்:

இயேசு தம்முடைய கடைசி வாரத்தில் 76 கேள்விகளை கேட்டார். அவருடைய அப்போஸ்தலர்கள் அவர்களுடைய நடத்தையை மாற்றிகொள்வதற்கு. அவர் கேள்விகளை பயன்படுத்தி போதித்தார். அதில் சிலவற்றிலிருந்து நாம் பாடங்களை கற்றுகொள்ளுவோம். "எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? "(யோவான் 13:29-38)

பஸ்கா நாளின் சாயங்காலத்தில், இயேசு பேதுருவிடம் இந்த கேள்வியை கேட்டார். அதற்குப்பின் வரும் நேரத்தில், மூன்று முறை என்னை மறுதலிப்பாய் என்று இயேசு, பேதுருவிடம் கூறினார். அவருக்காக மரிக்க பேதுரு தயாராக இல்லை என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆகவே பின்நாளில், பேதுருவை, செயல்படுத்துவதற்கு, கற்பிக்கும் கருவியாக, இந்த வலுவான கேள்வியின் வல்லமையை பயன்படுத்தினார். இயேசுவின் கேள்விக்குள்ளிருக்கும் அன்பை காண்பதற்கு, பேதுரு அவருடைய பயங்கள், கவலைகள், வருத்தங்களை மற்றும் விரக்திகளை தாண்டி வரவேண்டியதாக இருந்தது. இவ்விடத்திற்கு வர பேதுருவுக்கு காலம் சென்றது.

இயேசு பேதுருவிடம் மிக பொறுமையாக இருந்தார். வெகு சீக்கிரத்தில் பரிசுத்த ஆவியின் உதவியோடு, சபையில் பேதுரு ஒரு முக்கியமான மூப்பராக தோன்றினார். இறுதியாக, பேதுரு இயேசுவுக்காக தன்னுடைய ஜீவனை கொடுத்தார். பேதுரு தம்முடைய வாழ்க்கை மற்றும் மரணத்தினால், இந்த கேள்விக்கு விடையளித்தார். அதேபோல நம்மிடமும் இயேசு பொறுமையாக இருக்கிறார். பேதுருவை போல நாமும் "ஆம்" என்று

பதிலளிக்கவேண்டும். பரிசுத்த ஆவி நம்முடைய சிந்தையை செயல்படுத்தி நமக்கு தேவையான சக்தியை கொடுக்கும். "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணா திருப்பேனோ என்றார். " (யோவான் 18:11)

சீஷர்கள், இயேசுவை இன்னும் ஒரு போர்வீரனாக யோசித்துகொண்டிருந்தார்கள். பேதுரு தானும் ஒரு நல்ல போர் வீரனாக இருக்க முடியும் என்று காண்பிக்க தீர்மானித்தார் ! சண்டை போடாமல் இருக்கவும், அதே நேரத்தில் கிறிஸ்துவின் போர் வீரனாக இருக்கவும், இயேசு பேதுருவுக்கு கற்பித்தார்.

இயேசு தம்முடைய சீஷர்களை பட்டயம் எடுத்துகொள்ள சொன்னார். ஆனால் அதற்குபின் அதை எவ்வாறு பயன்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று கற்பித்தார். நமக்கு "எளிதான வழிக்கு" இந்த பட்டயம் நித்திய உருவகமாக உள்ளது. தேவனுடைய சித்தத்தின், சுத்திகரிக்கும் வல்லமைக்கு இயேசு தன்னை அர்ப்பணித்து, பிதா தம்முடைய "பாத்திரத்தில்" அவருக்காக ஊற்றினதை முழுமையாக பானம்பண்ணுவதற்கு இயேசு கற்றுகொடுத்தார்.

கெத்சமனே தோட்டத்தில் இயேசு பலவீனமாக இருப்பது போல சீஷர்களுக்கு தோன்றியது.. ஆனால் முடிவில், இயேசுவின் பலவீனத்திற்குள், தேவனுடைய பலத்தை கண்டார்கள். நாம் இந்த உலகத்தின் பார்வையில் பலவீனர்களாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய பலவீனத்தில் தேவனுடைய பலம் நமக்குள் கிரியை செய்வதை காண்கிறோம். வன்முறையின் போது நமக்கு இரண்டு வழிகளில் செயல்படுவதற்கு நம்முடைய மாம்சம் கூறும் - எதிர்த்து போராடு, அல்லது ஓடிவிடு. இயேசு நமக்கு மூன்றாவது வழியை காண்பித்திருக்கிறார். தேவனுடைய சித்தத்திற்கு தத்தம் செய்யவேண்டும். ஆனால் இந்த கேள்விக்கு அந்த இராத்திரியில் சீஷர்கள் என்ன பதிலளித்தார்கள் ? ஓடிவிட்டார்கள்!

நம்முடைய ஆண்டவரின் நினைவுக்கூரும் நேரம் முன்னேருகையில், நம்முடைய பட்டயத்தை எட்டிபிடிக்க பல வாய்ப்புகள் வரும். அதற்கு பதிலாக, இந்த வாய்ப்புகளை தேவனுடைய சித்தத்திற்காக அர்ப்பணித்து, அவருக்காக பாடுப்பட்டு, அவ்வாறு இயேசுவை பின்பற்ற வேண்டும்.

நம்மை தற்பாதுகாத்து கொள்ள வன்முறையை பயன்படுத்தமுடியாது. வன்முறை உயிர் பிழைத்தவர்களை கசப்புணர்வுக்கும், தாக்குபவர்களில் கொடூரத்திற்கும் வழி நடத்தும். இயேசுவை பின்பற்றினால், உபத்திரவத்தின் பாத்திரத்தை நாம் பருகவேண்டும். இந்த உலகத்திற்கு நாம் பலவீனர்களாக காணப்பட்டாலும், தேவனுடைய கர◌ங்களில் நாம் பலமுள்ளவர்களாக இருப்போம். இது நம்முடைய மாம்சத்தின் தேவைகளுக்கு அறிமுகமில்லாததாக இருப்பதினால், தேவனுக்குள் அதிகமான நம்பிக்கை தேவை.

இந்த ஒரு நொடியில் ஊக்கமளிக்கப் பட்டதினால் தான் அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவுக்கு "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. "(11தீமோத்தேயு2:1-8) என்று அறிவுறுத் தியிருக்க வேண்டும். பாடுப்படுவதற்கு இயேசு ஸ்தேவானுக்கு கற்பித்தார், அதை அவர் தர்சு பட்டணத்து சவுலுக்கு செயல்முறைபடுத்தி காட்டினார். அதற்குபின் இவர் தீமோத்தேயுவுக்கு கற்றுகொடுத்தார். கெத்சமனே தோட்டத்தில், இயேசுவினால் கேட்கப்பட்ட கேள்வி, அப்போஸ்தலர்களின் வாழ்க்கையையும் தாண்டி, கிறிஸ்துவுக்குள் அநேக போர் வீரர்களை உருவாக்கும் அளவுக்கு வல்லமையுள்ளதாக இருந்தது. "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்." (மத்தேயு 26:53,54)

இயேசு புயலை அமைதிப்படுத்தியதும், கடலின் மேல் நடந்ததையும் மற்றும் மரித்தோரை எழுப்பியதையும் பேதுரு கண்டார். இயேசு திரும்பி போராடவில்லை என்பதை அவர் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கவேண்டும். இயேசு பதிலுக்கு போராடவில்லை, பேதுருவின் உள்ளுணர்வு, அவரை ஓடும்படி தூண்டியது. ஒருவேளை , இயேசுவினிடத்திலிருந்து வந்த இந்த இரண்டு கேள்விகள் பேதுருவின் மனத்தில் சிக்கி, மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசன◌ங்களை இன்னும் ஆழமாக பார்க்க ஊக்கமளித்திருக்கும். எருசலேமில் கூடியிருந்த யூதர்களின் திரளான கூட்டத்தில், அவருடைய வல்லமையுள்ள பிரச◌ங்கத்திற்கு தேவைப்பட்ட ஐசுவரியமுள்ள செய்திகள், இவைகளை பற்றிய ஆர்வமுள்ள

படிப்புகளிலிருந்து பேதுரு பெற்றிருக்கவேண்டும். (அப்போஸ்தலர் 2)

இயேசுவின் கேள்விகளுக்கு முதல் முறை நாம் சரியான விடையளிக்காமல் போனாலும், அதற்கான பதிலை இரண்டாம் முறை சொல்லுவதற்கு... மறுபடியும் வாய்ப்புகள் கிடைக்கலாம் என்பதற்கு இயேசு பேதுருவிடம் காண்பித்த நீடித்த இரக்கமும், கிருபையும் நமக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

இந்த கேள்விகளிலிருந்து பேதுரு கற்றுகொண்ட பாடம் என்ன ? ஒருவேளை அவருடைய அழகான மனவொலி பதிலை தருகிறது :

"ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப் படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியு மானவரிடத்தில் திருப்பப் பட்டிருக்கிறீர்கள்."(1பேதுரு 2:19-25)

"அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?"(யோவான் 14:7-10)

இயேசு, ஆலயத்தில் காசுக்காரருடைய மேஜைகளை கவிழ்த்துபோட்டதையும், மரித்த லாசரை உயிர்பித்ததையும், பரலோகத்தில் அநேக வாசஸ்தல்ங்கள் உண்டென்று உத்தரவாதம் அளித்ததை பிலிப்பு பார்த்துகொண்டிருந்தார். ஆனால் பிலிப்புக்கு இன்னும் தேவைப்பட்டது. பிதாவை காண்பிக்கும் படிக்கு அவர் இயேசுவிடம் கேட்டார். எப்போதாவது இயேசு நமக்கு கொடுத்திருப்பதை விட அதிகமாக விரும்புகிறோமா ?

ஒரு குறுகிய காலத்திற்கு பின், இயேசு விசாரணைக்கும், துன்புறுத்தப்படுவதற்கும் கொலைச் செய்யப்படுவதற்கும் அழைத்து செல்லப்படுவார். இந்த சம்பவ்ங்களுக்கு பிலிப்பு குருடராக இருந்தார். ஒருவேளை நாம் சில நேர்ங்களில் பிலிப்பை போலிருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் இயேசுவைப் பற்றி படித்திருந்தாலும், கேட்டிருந்தாலும், அவரை இன்னும் நாம் அறியாமல் இருக்கிறோம். எங்களுக்கு இன்னும் வேண்டும் என்று அவரிடம் கேட்கிறோம். இன்னும் இது கிடைத்தால் எங்களுக்கு போதும் என்று கூறுகிறோம். ஆனால் பிலிப்பு போல நாம் நம்புவதில்லை. மேலும், முன்னமே நாம் பெற்றிருப்பதை பற்றி புரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். நாம் இயேசுவை பற்றி சகலத்தையும் "கற்றுகொண்டு", ஆனால் உண்மையில் அவரைப் பற்றி அறிந்துகொள்ளாமல் இருந்தால், நிச்சயமாக நமக்கு அது கண்ணியாக இருக்கும். பிலிப்புக்கு இயேசு கொடுத்த பதிலில் ஒரு உயர் தரமான சத்தியம் தொடர்ந்தது. "என்னை கண்டவன் என் பிதாவை கண்டான்" நாம் கிறிஸ்துவோடு கொண்ட ஐக்கியத்தின் வழியாக தேவனை கண்டால் நாம் திருப்தியடையலாம். "இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்."(யோவான் 16:29-33)

அவர்கள் இப்போது அவரை நம்புவதாக யோவான் அறிவித்ததற்கு மறுமொழியாக, இயேசு இந்த கேள்வியை கேட்டார். விரைவாக நாம் சில தைரியமான அறிவிப்புகளை கொடுக்கும்போது, நாம் ஒரு நிலைக்கு வந்துள்ளோம் என்பதை நமக்கு எச்சரிப்பாகவும் இது இருக்கலாம். மேலும் விசுவாசத்திலும், புரிந்துகொள்ளுதலிலும் ஒரு உயர்வான நிலைக்கு நம்மை இழுத்து செல்ல,

இயேசு நம்முடைய வாழ்க்கையின் அடுத்த நெருக்கடியாக நிலைக்கு எடுத்துசெல்கிறார்.

அப்போஸ்தலன் யோவானை போல, நாமும் நம்முடைய விசுவாசத்தின் உண்மையான மதிப்பை உணராதிருக்கிறோம். ஒரு படுக்கையில் சுகத்தை எதிர்பார்ப்பது போல, யோவான் அவருடைய விசுவாசத்தை நோக்கியிருக்கவேண்டும். ஆனால் அவருடைய விசுவாசம், ஒரு சிலுவையை போல் சுமக்கவேண்டும் என்பதை இயேசு யோவானுக்கு காண்பித்தார். நாம் படுக்கையில் ஓய்வெடுத்து கொண்டிருக்கிறோமா அல்லது சிலுவை சுமத்துகொண்டு, வயலில் வேலை செய்துகொண்டிருக்கிறோமா ?

அப்போஸ்தலனாகிய யோவானை போலவே, இயேசு நம்முடைய சந்தேகங்கள், பயங்கள், நம்முடைய பலவீனங்கள் மற்றும் குறைகளை காண்டு, நம்முடைய விசுவாசத்தை உருவாக்க அவைகளை பயன்படுத்தகிறார். அறிவாற்றல் மற்றும் உணர்வுள்ள ஆத்தும திருப்தியே இதன் பலனாக இருக்கும்."பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்."(லூக்கா 22 :25-27)

அந்த பஸ்கா மாலையில், இயேசு அப்பத்தையும், பாத்திரத்தையும் சீஷர்களுக்கு பங்கிட்டு கொடுத்தார். அவர்களில் ஒருவர் அவரை காட்டிகொடுக்கபோவதாக இயேசு கூறினார். அவர்களின் பதில் ? "அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று."(லூக்கா 22:24) இயேசுவின் பதில் ? அவருடைய வஸ்திரங்களை கழற்றி வைத்து விட்டு, அவர்களின் பாதங்களை கழுவினார். சுயநலமின்றி,மனத்தாழ்மையோடு,பரிபூரண அன்பை அடிமைத்தனத்தின் செயல்களினால், நிரூபித்தால், உயர்நிலையை நாம் பெற்றுகொள்ளலாம் என்று இயேசு சீஷர்களுடைய பாதங்களை கழுவி, அவர்களுக்கு கற்றுகொடுத்தார்.இயேசு சீஷர்களின் அற்பமான வாக்குவாதங்களுக்காக அவர்களை தண்டிக்கவில்லை. அதற்குபதிலாக, ஒரு எளிமையான கேள்வியை கேட்டு, சத்தியத்தில் அவர்களை வழிநடத்தும்படிக்கு, தேவையாக ஒரு அனுபவத்தை கொடுத்தார்.

அதேபோல,நம்மிடமிருந்து நம்முடைய கவனத்தை திருப்பி, மற்றவர்களிடம் கவனமாக இருக்கவேண்டும் என்று காண்பித்து, ஜீவனுக்குரிய ஒரு புதிய வழிக்கு இயேசு நம்மை அழைக்கிறார். அவர்களின் கால்களை கழுவி, அவர்களின் மனசாட்சி அவர்களை குத்தும்படி செய்தார். அவர்களுடைய சிந்தனைகளையும், வருங்கால ஊழியங்களையும் அவருடைய சுயநலமற்ற, தாழ்மையுள்ள செயல்களினால் வடிவமைத்து கொண்டிருந்தார். பிந்திய காலத்தில் அவர்கள் புரிந்துகொண்டு, தங்களுடைய சொந்த ஊழியத்தில் திறமையாக பயன்படுத்த,இயேசு ஒரு மறக்கமுடியாத அனுபவத்தை கொடுத்தார்.

தன்னலமற்ற சேவையில் நம்மை எப்படி ஒப்புகொடுக்கவேண்டும் என்பதை இயேசு நமக்கு காண்பிக்கிறார் - தலைகீழான ஒரு இலட்சியம். சிலுவையின் மரண பரியந்தம் இயேசு தன்னை தாழ்த்தினதால், பிதாவாகிய தேவனால் அவர் உயர்த்தப்பட்டு, எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை அவருக்கு கெடுத்தார். (பிலிப்பியர் 2:8-11) ஈடுபலியின் மூலமாகவும், அவருடைய இராஜ்யத்தில், பிரதான ஆசாரியராக அவர் செய்யும் வேலைகளினாலும், மனுக்குலத்தின் ஒவ்வொரு நபரும் தங்களுடைய கால்களிலிருக்கும் அழுக்கை கழுவுவதற்கு உதவி செய்வார். "பின்னும் அவர் அவர்களை நோக்கி: நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள்."(லூக்கா 22:35)

பேதுரு மூன்று முறை மறுதலிப்பதற்கு முன், சேவல் மூன்று முறை கூவுவதில்லை என்று இயேசு பேதுருவிடம் சொன்னவுடன், இந்த கேள்வி, மற்றும் சீஷர்களின் உறுதியான பதில் வந்தது. இந்த கேள்வியில், அவர்களுடைய முந்தய ஊழியங்களில், அவர்கள் உணர்ந்த வல்லமையையும், அவர்களுடைய அனைத்து தேவைகளை சந்தித்த தேவனுடைய உண்மைதன்மையையும் இயேசு அவர்களுக்கு நினைப்பூட்டினார். விரைவில், அவர்களிடம் ஒன்றும் இருக்கபோவதில்லை. மீண்டும் அவர்களுடைய சகலத்திற்கும் தேவனையே சார்ந்திருக்கவேண்டும். இந்த கேள்வியோடு, இயேசு அவர்களின் இருதயங்களை விசுவாசத்தை நோக்கி தூண்டிவிட்டு, வரக்கூடிய ஊழியங்களில் கடினமான வேலைகளை செய்வதற்கு அவர்களுடைய இருதயத்தை உந்தினார்.

மலைபிரச□கத்தின்போது,"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். "(மத்தேயு 6:33) என்று அவர் கற்பித்த, பரலோக இராஜ்யத்தின் ஒரு முக்கியமான தூணை அவர் வலுப்படுத்தினார். ஒன்றும் இல்லாமல் அவருடைய ஊழியத்திற்குள் செல்லும்போது, அவர்களுடைய அனைத்து தேவைகளும் தேவனால் சந்திக்கப்படும் என்று அவர்களுக்கு நினைப்பூட்டினார்.

சுவிசேஷம், த□களுக்குள்ளும், அதை கேட்ட மற்றவர்களின் வாழ்க்கையிலும் ஏற்படுத்தின மாற்றத்தை அப்போஸ்தலர்கள் கண்டார்கள். இதுவே அவர்களின் வாழ்வாதாரமாக இருந்திருக்கும். அவர்களின் தனிப்பட்ட ஊழியத்தில், "சத்தியத்தை வா□கு விற்காதே"(நீதிமொழிகள் 23:23). என்ற கொள்கையை கடைபிடித்திருப்பார்கள். இவ்வாறாக, □ானத்தையும், புரிந்துகொள்ளுதலையும், புத்திமதிகளையும் பெற்றிருப்பார்கள். (நீதிமொழிகள் 1:2) அனுப்பப்பட்டவர்களிடமும், த□களுடைய தோல்விகளையும், வெற்றிகளையும் ஆராய்கிறவர்களிடமும் இந்த சத்தியம் கூடுதலான ஊழிய□களுக்கு உற்சாகம் அளிக்கும்.

**முடிவுரை:**

நிச்சயமாக, பிந்தய காலத்தில், அப்போஸ்தலர்களின் சிந்தைகளை தூண்டி,செயல்படுத்தும்படியாக, இயேசு அவருடைய கடைசி வாரத்தில், கேள்விகளின் ஆற்றலை, மறைமுகமான ஒரு கருவியாக பயன்படுத்தினார். வசன□களின் வழியாக நாமும் அந்த காலத்திற்கு பயணித்து, சீஷர்களுடைய பாதரட்சைக்குள் நம்முடைய பாத□களை வைத்து, இயேசு கேட்ட கேள்விகளை கேட்பதற்கு நமக்கும் ஒரு விசேஷித்த வாய்ப்புண்டு. ஏனெனில் நாமும் அவருடைய சீஷர்களாம்,,,

இயேசு அவருடைய கேள்விகள் மற்றும் பதில்களின் வழியாக இயேசு தம்முடைய பணியை குறித்து சீஷர்களுக்கு தெளிவுப்படுத்தினார். இயேசுவின் கேள்வியின் ஆற்றலினால், விலையேறபெற்ற ஒவ்வொரு சீஷர்களின் இருதயத்திலும், அவருடைய பணியைப் பற்றிய அர்த்த□கள் தெளிவாக பதிந்தது. இந்த முக்கிமான பாட□கள் நம்மிடத்திலிருந்து தொலைந்துபோகாமல் இருப்பதாக.

இந்த கேள்விகளுக்கு, துய்மையான மனசான்றோடும், நேர்மையோடும் பதில் அளிப்போமாக. அதற்குபின் அப்போஸ்தலர்களை போல, நம்முடைய விசுவாசத்தின் அடுத்த நிலைக்கு இயேசு நம்மை அழைத்து செல்ல அனுமதிப்போம்.

"நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்."(மத்தேயு 16:15)

இயேசுவின் வாழ்க்கையில் அடையாளங்கள்

# அப்பம் மற்றும் பாத்திரம்



"அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து," (ஆதியாகமம் 14:18)

**James Parkinson**

நம்முடைய ஆண்டவரின் பலியின் மரணத்தை நினைவுகூருதலைப் பற்றி, பழைய ஏற்பாட்டில் குறிப்புகள் உள்ளது. சுமார் நான்காயிர வருடங்களுக்கு முன், "மெல்கசேதேக்கு (நீதியின் இராஜா), சாலேமின் இராஜா, உன்னதமான தேவனுடைய ஆசாரியனாக (ஆதியாகமம் 14:18) அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்தார். மீண்டுமாக, நினைவுகூருதலின் அடையாளங்கள் இங்கு நிழலிடுகிறது. மேலும் "இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்."(எபிரெயர் 7:3) என்று பவுல் கூறுகிறார்.

பின்னர், யோசேப்பின் வாழ்க்கையில் பல குறிப்புகளை கொண்டிருந்தது. (1) எகிப்தில் பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியாகவும் இருந்த போர்த்திபாரின் வீட்டில், யோசேப்பு ஒரு அடிமையாக தன்னுடைய வாழ்கையை துவங்கினார். அதற்குபின், அங்கு அவர் பெற்ற அதிகாரத்தில் படிப்படியாக முன்னேறினார். அந்த அதிபதி, "யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனை தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். "(ஆதியாகமம் 39:4)(2)யோசேப்பு பொய்யாக குற்றம் சாட்டப்பட்டபோது, அவர் தன்னை தாழ்த்தினார். அவர் இராஜாவின் (பார்வோனின்) சிறையில் அடைக்கப்பட்டார். ஆயினும். "கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை." (ஆதியாகமம் 39:23)

இரண்டு வருடங்களுக்கு பின், 7 நல்ல விஷயங்கள் மற்றும் 7 கெட்ட விஷயங்களை பற்றி பார்வோன் கனவு கண்டார். இவைகளை விளக்கும்படி யோசேப்பு அழைக்கப்பட்டார். அதை அவர் விளக்கினார். (3) அதற்காக அவர் எகிப்தில் இரண்டாவது நிலைக்கு உயர்த்தப்பட்டார். எகிப்தில் யோசேப்பின் வாழ்க்கை, இயேசு வாழ்ந்த மூன்று நிலைகளை தெளிவாக அடையாளப்படுத்துகிறது :

(1)லோகாஸ் ("சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை."யோவான் 1:3)(2) ஒரு சராசரி மனுஷனாக வருவதற்கு அவருடைய ஆவிக்குரிய சுபாவத்தை தாழ்மையாக விட்டுகொடுத்தார். இங்கு மற்றவர்களின் நலனுக்காக தன்னுடைய வாழ்க்கையை செலவிட்டார். இறுதியாக, ஆதாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் அவருடைய ஜீவனையே கொடுத்தார். (3) அவர் தம்முடைய பிதாவினால் திவ்விய சுபாவத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டபோது, அண்டசராசரத்தில் இரண்டாவது நிலைக்கு உயர்த்தப்பட்டார். "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது."(மத்தேயு 28:18)

இந்த நேரத்தில், பார்வோன் கடுமையான வயிற்று வலிக்கு ஆளானதால், பானபாத்திரக்காரனும், சுயம்பாகியும் சிறைக்கு அனுப்பட்டார்கள் என்று குறிப்புகள் காட்டுகிறது. இந்த இருவரும் யோசேப்பின் வசத்தில் இருந்தார்கள். ஒரு இரவில் இருவரும் ஒரு சொப்பனம் கண்டார்கள். பார்வோனுடைய பாத்திரத்தில் திராட்சைபழ ரசத்தை பிழிந்துகொடுக்கும் திராட்சை பழங்களை பானப்பாதிரக்காரன் கண்டார். சுயம்பாகி தன் தலையில் அப்பங்களை கொண்டு போகும்போது, அதை பறவைகள் சாப்பிட்டதாகவும் கனவு கண்டார். ஒவ்வொன்றுக்கும் யோசேப்பு மிக சரியாக விளக்கமளித்தார். மூன்றாம் நாளிலே,உணவில் விஷம் கலந்த குற்றவாளி யார் என்பதை பார்வோன் (அவருடைய பிறந்த நாள்) தீர்மானித்து, சுயம்பாகியை தூக்கிலிட்டு, பானப்பாத்திரக்காரனை மீண்டும் பணியில் அமர்த்தினார். இரண்டாயிர வருடங்களுக்கு பின் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு நினைவுகூறுதலின் அடையாளங்களாக இந்த திராட்சை ரசத்தையும் (புளிப்பில்லா) அப்பத்தையும் அறிமுகப்படுத்தினார்.

யோசேப்பு மற்றும் மெல்கிசெதேக்கு, இருவரும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அடையாளப்படுத்துகிறார்கள். நினைவுகூருதலின்

அடையாள௩களான அப்பம் மற்றும் பாத்திரத்தை (திராட்சைரசத்தையும்) குறிப்பிடும் அவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் பலியாக செலுத்தினார்.

## மது அல்லது திராட்சை ரசமா?

இயேசு தம்முடைய நினைவுகூருதலை, மதுவோடு அல்லது திராட்சை ரசத்தோடு அனுசரித்தார் என்ற நீண்ட நாளாய் ஒரு கேள்வி உள்ளது. இருபுறமும் பகுத்தறிவான வாத௩கள் உள்ளது. திராட்சரசம் (நொதிக்கப்பட்ட) - வாட்சடவரின் (Watch Dower) பதிப்பில் (ஜூலை 1883ல் முன்வைக்கப்பட்ட ஓர் நிகழ்வு என்னவெனில், "யூத வழக்கத்தைப் பார்த்த வரையில், திராட்சரசம் புளிப்பு தன்மை கொண்டது என்னும் கூற்றை நிருபிப்தற்கு பதிலாக அது மறுக்கிறது. ஏனெனில், யூதர்கள் பஸ்காவில் திராட்சரசத்தைப் பயன்படுத்திப் புளித்தமாவை ஒதுக்கி விடுவார்கள்... பாலஸ்தீனத்தின் திராட்சைப் பழ அறுவடைக் காலம் செப்டெம்பர் மற்றும் அக்டோபர் ஆகும், மேலும் பஸ்கா ஆறு மாதம் கழித்து தான் அனுசரிக்கப்படும். அக்டோபரில் தயாரிக்கப்பட்ட திராட்சரசம் ஏப்ரல் மாதத்திற்கு முன்பே தேவைக்கேற்ப நொதிக்கப்பட்டிருக்கும்.. நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் நாளின்போது இந்த நொதிக்கப்பட்ட திராட்சரசத்தை குடிப்பதினால் தான் இடறல் அடைவேன் என்று ஒருவர் என்னினால், அவர் உலர் திராட்சையின் சாற்றை பருகலாம் என நா௩கள் பரித்துரைக்கிறோம், அது மதுவல்ல, மாறாக அதுவும் "திராட்சை பழமாகும்." (பக்கம் 6)

1904ல் அதே எழுத்தாளர் இவ்வாறாக எழுதுகிறார்," இந்த நினைவுகூருதலை கர்த்தர் ஆசரித்த போது, நொதிக்கப்பட்ட திராட்சை ரசத்தையே பயன்படுத்தி இருப்பார் என நா௩கள் நிதானிக்கின்றோம். எனினும், கர்த்தர் மது என்று குறிப்பிடாமல், "திராட்சப்பழரசம்" (மத்தேயு 26-29) என்று கூறினதினாலும், தற்காலத்தில் மதுப்பழக்கம் பெருகியும் தீய வல்லமை அதிகம் அது பெற்றுள்ளதால், திராட்சை அல்லது உலர் திராட்சையின் நொதிக்கப்படாத சாற்றை பயன்படுத்த கர்த்தரின் அனுமதி நமக்கு இருக்கிறது என்று நாம் எண்ணுகிறோம். (வேதாகம ஆராய்ச்சி, தொகுதி 6, பக்கம் 476, அடிக்குறிப்பு)

திராட்சரசம் (நொதிக்கப்படாத) - ரோமில் உள்ள போண்டிப்பிகல் கிரிகோரியன் பல்கலைக் கழகத்தின் முதல் கத்தோலிக்கர் அல்லாத பட்டதாரி சாமியுல் பேக்கியோக்கி என்பவர் இவ்வாறாக குறிப்பிடுகிறார், "ஆ௩கிலத்தில் ஓயின், லத்தீனில் வின்னம், கிரேக்கில் ஓய்நோஸ், எபிரெய பாஷையில் யாயின் என்பன காலம்காலமாக நொதிக்கப்பட்ட அல்லது நொதிக்கப்படாத திராட்சப்பழரசத்தை குறிப்பதாகவே இருந்து வருகின்றது ")சாமியும் பேக்கியோக்கி, "வேதாகமத்தில் திராட்சரசம்" சுருக்கப்பட்ட பதிப்பகம் - பெர்ரின் ஸ்பிரி௩ஸ், மிச்சிகள் - திருமறை சார்ந்த முழு உளக்காட்சிகள் என்னும் புத்தகத்தொடர், 2002, பக்கம் 19

"திராட்சை ரசம் நொதித்துபோகாமல் பாதுகாக்க, பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட குறைந்தது நான்கு முறைகள் இருப்பதாக பழ௩காலத்து ஆய்வுகள் குறிப்பிடுகிறது - (1) ரசத்தை கொதிக்கவைத்து, பாகாக மாற்றிவைப்பது. (2) நொதிக்கவைக்கும் கூழை, பழ ரசத்திலிருந்து வடிக்கட்டி, பிரித்தெடுப்பது. (3)நன்கு மூடிபோடப்பட்ட ஜாடிகளில், திராட்சை ரசத்தை முத்திரையிட்டு, அதை குளிர்ந்த குளத்தில் மூழ்க வைப்பது. (4)ஜாடிகளை முத்திரிப்பதற்குமுன் கந்தகத்தால் புகையூட்டுவது." என்று பாக்கியோச்சி தொடருகிறார். திராட்சை ரசத்தின் நொதித்தலை ஒரு நெருக்கடியான நேரத்தில் அதவாது ஆல்கஹால், (alcohol ) கீட்டானாகவும், (ketone ) அதற்குபின் வினிகராக (Vinigar) மாறுவதற்கு முன் நிறுத்தவேண்டும்."புளித்த ரசத்தை பாதுகாப்பதை விட, புளித்து போகாத திராட்சை ரசம் பாதுகாப்பதற்கு எளிது "என்று முந்தி அவர் குறிப்பிட்டார்.

"திராட்சை ரசம்" என்பதன் பொருளைப் பற்றி அல்லது இந்த உலகத்திற்காக நம்முடைய ஆண்டவராம் இயேசு பலியின் மரணத்தை நினைவுக்கூறுவதற்கு பயன்படுத்தும் "பாத்திரத்தைப்" பற்றி நாம் ஒவ்வொருவரும் ,புரிந்துகொள்ள சிறந்த முறையில் முயற்சிக்கவேண்டும். அதற்குபின், அந்த புரிதலை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொள்ள முடியுமா இல்லையா என்பதை நாம் தயவாக சிந்திக்கவேண்டும்.

## மிக முக்கியமான விஷயங்கள்:

நினைவுகூருதலின் சின்ன௩களை காட்டிலும், அந்த சின்ன௩கள் அடையாளப்படுத்தும் விஷய௩கள் மிக முக்கியம். நம்முடைய பிரதான முக்கியத்துவம், நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் பலி! "இதை என் நினைவாக செய்யு௩கள்.." (1கொரிந்தியர் 11: 24-25)ஆனால், அவர் அழைத்த அனைவரையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இது குறிக்கிறது. "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். "

## நினைவுக்கூருதலின் தேதிகள்

| | | |
|---|---|---|
| **2018** March 29 Th | **2028** April 09 Su | **2038** April 18 Su |
| **2019** April 18 Th | **2029** March 29 Th | **2039** April 07 Th |
| **2020** April 07 Tu | **2030** April 16 Tu | **2040** March 27 Tu |
| **2021** March 26 Fr | **2031** April 06 Su | **2041** April 14 Su |
| **2022** April 14 Th | **2032** March 25 Th | **2042** April 03 Th |
| **2023** April 04 Tu | **2033** April 12 Tu | **2043** April 23 Th |
| **2024** April 21 Su | **2034** April 02 Su | **2044** April 10 Su |
| **2025** April 11 Fr | **2035** April 22 Su | **2045** March 31 Fr |
| **2026** March 31 Tu | **2036** April 10 Th | **2046** April 19 Th |
| **2027** April 20 Tu | **2037** March 29 Su | **2047** April 09 Tu |

ஒருவர் இணையதளத்தில் சென்று எபிரெய காலண்டரை கண்டு, ஒவ்வொரு தேதியையும் சோதித்தறியலாம். -(www.hebcal.com/convertor) -மேலும், அதன் வலது பக்கத்தில் 13,நீசான் மற்றும் 3760+கிரிகோரியன் (பொதுவான) வருடம். எடுத்துக்காட்டாக, 3760 +2018 =5778 (தற்போதிய ஹீப்ரு ஆண்டு)

சந்தேகத்திற்கு இடமின்றி, "சீரத்தை" பற்றி புரிந்துகொள்ளுவதில், அப்போஸ்தலர்களுக்கு பிரச்சனை இருந்தது. பிரதான அப்போஸ்தலர்களாக இருக்க முயற்சித்ததற்காக யாக்கோபையும், யோவானையும் பேதுரு மற்றும் அவரது சகோதரர் அந்திரேயா மன்னிக்க வேண்டியதாக இருந்தது. கடைசி மணி நேரத்தில் பேதுரு இயேசுவை மறுதலித்ததற்காக மற்ற 10 சீஷர்களும் அவருக்கு இரக்கம் பாராட்டவேண்டியதாக இருந்தது. இயேசுவின் கடைசி நேரத்தில் மற்ற எந்த சீஷர்களும் அவரோடிராதவர்களை பற்றி யோவானும், பேதுருவும் புரிந்கொள்ளவேண்டிதாக இருந்தது. இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பின்அவரை கண்டதாக கொடுத்த அறிக்கையை தோமா நம்பாததினால், மற்ற பத்து பேர் அவரிடம் பொறுமையாக இருக்கவேண்டியதாக இருந்தது. இந்த நினைவுகூருதலை சிந்திக்கையில், "சகோதரர்களுக்குள் நான் யாரை மன்னிக்கவேண்டும் ? " என்று நாம் ஒவ்வொருவரும் கேட்டுகொள்ளலாம்.

தவறு செய்த ஒரு சகோதரர் அல்லது சகோதரியை பற்றி என்னுடைய இருதயம் விரோதம் கொண்டிருந்தால், நான் என்னை கட்டாயமாக மாற்றிகொள்ளவேண்டும். அதில் நான் தோல்வி அடைந்து, கோபத்தை தக்கவைத்துகொண்டால், எண்ணாகமம் 9:9-12 ம் வசனங்களில் உள்ளவைகளை நான் கருத்தில் கொண்டு, நினைவுகூருதலை முப்பது நாட்களுக்கு பின் அனுசரிக்கவேண்டும். (இரண்டாவது எபிரெய மாதத்தின் 14ம் தேதி)

## நினைவுகூருதலின் தேதிகள் :

நினைவுகூருதலின் நாளை எப்படி கணக்கிடுவது ? இன்று யூதர்கள் நீசான் 14ம் தேதி, பஸ்கா பண்டிகையை அனுசரிப்பார்கள்.பஸ்கா ஆடு 14ம் தேதி சாயங் காலத்திலே அடிக்கப்படும். ஆனால் இன்று ஆடுகளை பலிசெலுத்த ஆலயங்கள் இல்லாததினால் அவர்கள் 14ம் தேதி அனுசரிப்பதில்லை. "உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிறபோது பஸ்காவை அடித்து, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திலே, அதைப் பொரித்துப் புசித்து, விடியற்காலத்திலே உன் கூடாரங்களுக்குத் திரும்பிப்போவாயாக. " (உபாகமம் 16:6,7) இயேசு அவருடைய நினைவுகூருதலை 14ம் தேதி சாயங் காலம் அனுசரித்தார். ஆகவே, நாம் நம்முடைய ஆண்டவரின் நினைவுகூருதலை நீசான் 14ம் தேதி மாலை அனுசரிக்கவேண்டும். நவீன காலத்தில் பயன்படுத்தப்படும் கிரிகோரியன் காலன்டர், நீசான் மாதம் 13ம் தேதி சூரிய அஸ்தமனத்திற்குபின் இதற்கு ஒத்திருக்கும். இனி வரக்கூடிய முப்பது வருடங் களுக்கு, மேலே கொடுக்கப்பட்டுள்ள விளக்கப்படத்தில் தேதிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக நினைவுகூருதலின் நாள் திங் கள், புதன், அல்லது சனி கிழமைகளில் வருவது இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.இது நிலையான யூத நாட்காட்டியின் தொன்மையான அடையாளமாகும். என்னவெனில், இந்த நாட்காட்டி வார ஓய்வு நாளுக்கு அண்மையில் மகா பரிசுத்தமான நாள் (சுக்கோத் பண்டிகையின் முதலாம் நாள் போன்று) வராமல் தடுப்பது மாத்திரமல்லாமல், வார ஓய்வு நாளன்று அதிக உடல் உழைப்புள்ள நாட்கள் வருவதையும் தடுக்கின்றது.

## நினைவுகூருதலில் இயேசு அறிமுகப்படுத்தின வரிசை

லூக்கா "வரிசையாக" வரலாற்றில் பதிவு செய்கிறார். (தொடர்ந்து, லூக்கா 1:3) மத்தேயு மற்றும் மாற்கும் அதில் சிலவற்றை மேற்பூச்சாக ஏற்பாடு செய்கிறார்கள். இப்படியாக, அப்பம் ரசம் பற்றிய சாத்தியமான வரிசை லூக்கா 22:14-20 வசனங் களில் கொடுக்கப்படுகிறது.

பஸ்கா ஆடுகளும், உண்மையான கர்த்தருடைய ஆடும் இன்னும் அடிக்கப்படாததினால், அவர் புசித்த கடைசி இராபோஜனம், பஸ்கா போஜனம் அல்ல. அது பஸ்கா காலமாக இருந்தபடியால், அதை பஸ்கா போஜனம் என்று அழைத்திருக்கலாம். ஆகவே, இ்கு "புசிப்பது" என்பதற்கு அப்பத்தை முதன்மையாக பொருள்கொள்ளலாம்.

## லூக்கா 22:15-18

அப்பம் (1) -நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

பாத்திரம் (2) - அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதைவாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் த ி ர ா ட ் ச ப ் ப ழ ர ச த ் ை த ப ் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

## லூக்கா 22:19-20

அப்பம் (3) - பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

பாத்திரம் (4) - போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக் கையாயிருக்கிறது என்றார்.

மத்தேயு 26:26 -29 வெறுமனே அப்பத்தையும், பாத்திரத்தையும் மேற்பூச்சாக இணைத்தார். "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். "

இவ்வாறு, இந்த இரண்டு வரிசையுமே, நம்முடைய ஆண்டவரின் நினைவுகூருதலை ஆசரிப்பதற்கு சரியானதாக இருக்கும்.

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்." (1கொரிந்தியர் 11:28)

**குறிப்பிடத்தக்க அற்புதம்**

# நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக இருக்கிறேன்



"லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்." (யோவான் 11:43)

**Ray Charlton**

லாசருவின் உயிர்த்தெழுதலுக்கு வேறுப்பட்ட எதிர்விளைவுகள் காணப்பட்டது. மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவின் சவ அடக்கத்தில் கலந்துகொண்ட துக்ககரமான அனைவரும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். எனினும் மத தலைவர்கள் எதிர் துருவத்தில் இருந்தனர்"அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, இயேசுவினிமித்தமாகமாத்திரம் அல்ல, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள். லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்த படியால், பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள்." (யோவான் 12:9-12)

*லூக்கா 7:12-15 ல் இயேசு வழியில் சென்ற ஒரு இறுதி ஊர்வலத்தை நிறுத்தி, ஒரே பேரான மகனை எழுப்பி, அவனுடைய தாயிடம் மறுபடியும் கொடுத்தார்.

*லூக்கா 8:40-56 ல் இயேசு ஜெப ஆலயத்தலைவனாகி யவீருடை மகளை எழுப்பினார்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் எருசலேமுக்கு வெளியே நடந்தது. ஆனால் இவர்கள் மரித்தவுடனே இது நடந்தது. அதாவது உண்மைகளை ஆசாரியர்கள் சிதைத்துவிட்டிருப்பார்கள் என்று பொருள்படுகிறது. இறப்பிலிருந்து உயிரோடெழும்பினதற்கு இடையில், உள்ள காலம் மிக குறைவாக இருந்தபடியால், இது அற்புதம் அல்ல என்று மதத் தலைவர்கள், விவரிப்பதற்கு எளிதாக இருந்திருக்கும். லாசருவின் விஷயத்தில் மிகவும் வித்தியாசமாக இருந்தது. இந்த குடும்பம் எருசலேமுக்கு அருகாமையில் இருந்தது. இவர்கள் பொது ஜனங்கள் மத்தியில், பரிட்சையமானவர்களாக இருந்தார்கள். மேலும் லாசரு மரித்து பல நாட்கள் ஆனது.

**இருப்பிடம் :**

ஒலிவ மலையின் தென் கிழக்கு சரிவில் எருசலேமின் கிழக்கில் 2 மைல் தூரத்தில் பெத்தானியா என்ற ஒரு சிறிய கிராமம் இருந்தது. அங்கு வளர்ந்திருந்த அநேக பனை மரத்தின் நிமித்தமாக அந்த பெயர் வந்தது. அங்கு லாசரு அவருடைய சகோதரி மார்த்தாள், மரியாள் மற்றும் குஷ்ட்டரோகியான சீமோன் தங்கியிருந்தார்கள். இவர்கள் இயேசுவுக்கு விசேஷித்தவர்களாக இருந்தார்கள். அவருடைய ஊழியத்தின் போது, குறிப்பிடத்தக்க நேரத்தை அவர்களோடு செலவழித்தார்.

இயேசுவின் ஊழியத்தின் போது அவருக்கு நிரந்தரமான வீடு இல்லை. "அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்." (லூக்கா 9:58) லாசருவின் வீட்டில் இயேசு இளைப்பாறுதல் அடைந்தார். ஒரு உண்மையான வரவேற்பும் உள்ளார்ந்த நட்பும் அங்கு உறுதிப்பட்டிருந்தது. அவருடைய வார்த்தைகள் உணர்ந்து கொள்ளப்பட்டு, மற்றும் பொக்கிஷமாக்கப்பட்டது. அவருடைய வார்த்தைகளையும், கிரியைகளையும், தொடர்ந்து தாக்கின, பொறாமையுள்ள பரிசேயர்களின் தாக்குதல்களிலிருந்து தன்னை புதுப்பித்து கொள்ள முடிந்தது. அவர் அந்த குடும்பத்தோடு கொண்டிருந்த உறவு விசேஷமானது.

**குடும்பம்:**

யோவான் இந்த குடும்ப உறுப்பினர்களை வயது வாரியாக பட்டியலிடுகிறார். (யோவான் 11:5) அந்த குடும்பத்தில் லாசரு இளையவராக இருந்தார் என்று பொருள்படுகிறது. லூக்கா 10 :38 -41 வசனங்கள் இயேசுவோடு அவர்களின் உறவை விரிவாக காண்பிக்கிறது. அந்த வீடு மூத்தவளாகிய மார்த்தாளுக்கு சொந்தாக இருந்தது. மரியாளும் லாசரும் அவளோடு தங்கியிருக்க வேண்டும். மார்த்தாள் மற்றும் மரியாள் மிகவும் வித்தியாசமானவர்களாக இருந்தார்கள். இயேசு வந்த போது.மார்த்தாள் அவருக்காக உணவு சமைக்க ஆயத்தப்படுகையில், மரியாள் இயேசுவின் பாதத்திற்கு அருகில் அமர்ந்து அவருடைய போதனைகளை கேட்டுகொண்டிருந்தாள். மரியாள் தனக்கு உதவி செய்யாததற்கு

கடிந்துகொள்ளும்படிக்கு இயேசுவை மார்த்தாள் கேட்டுகொண்டபோது, அவர்,"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். " (லூக்கா 10:38-41) இயேசுவின் சொற்களை மேற்கோல் காட்டி ஆதாம் கிளார்க்கின் கருத்து - "தேவைப்படும் காரியம் ஒன்றே", இயேசுவின் உண்மையான உணவும் பானமும் பிதாவின் சித்தம் செய்வதே என்பதினால், அவர் ஒரே ஒரு உணவு வகையை, அதாவது எளிய உணவை கேட்டுகொண்டார் என்று கருதுகிறார். இதை குறித்து ரசலின் கருத்து - மார்த்தாளையும், அவருக்கு ஆறுதல் வழ௺க... ஒரு கவனமுள்ள சமையல் காரியாகாக இருக்கும் அவளது பொறுப்புகளை இயேசு நிராகரிக்கவில்லை. .... மார்த்தாள் இயேசுவை அதிகமாக நேசித்ததால் அவருக்கு இவைகளை செய்ய விரும்பினாள். மரியாள் ஆண்டவரை நேசித்தால் மற்றும் ஆண்டவர் நேசித்தவைகளையும், அவர் பேசி மகிழும் வார்த்தைகளையும் அவள் நேசித்தாள். முடிந்த அளவுக்கு அத்தகைய மகிழ்ச்சியான ஐக்கியத்தையும், கூட்டணியையும், அவள் தவிர்க்கவில்லை.(5371)

இயேசு தம்முடைய மூன்றரை வருஷத்து ஊழியத்தின், அதிகபட்சமான நேரம், எருசலேமுக்கு வெளியே கலிலேயாவின் பகுதிகளில் செலவழித்தார். இப்போது அவருடைய ஊழியம் நிறைவடையும் போது, தீவிரம் அடைந்திருந்த எருசலேமின் தலைவர்களை இயேசு சந்தித்தார். "அப்பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு: எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறது." (யோவான் 10:24,25)

நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசு சொன்னவுடன் யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறிய, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். "இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பி, யோர்தானுக்கு அக்கரையிலே முன்னே யோவான் ஞானஸ்நானங் கொடுத்துக்கொண்டிருந்த இடத்துக்குத் திரும்பிப்போய், அங்கே தங்கினார்." (யோவான் 10:39-40) இந்த ஒரு நிகழ்வுக்கு பின்பும், எருசலேமுக்குள் வலம் வருவதற்கு முன்னும், லாசரு எழுப்பப்பட்ட சம்பவம் நடந்தது. (யோவான் 12:12-15)

### லாசருவின் மரணம்எழும்புதல்:

"மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான். கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே; அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான். அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்." (யோவான் 11:1-3) நோயுற்ற நிலை அதிகரித்து, த௺களுடைய சகோதரன் மரிப்பதை, அந்த சகோதரிகள் பார்த்துகொண்டிருந்தார்கள். இயேசு வியாதியஸ்த்தரை குணமாக்கினார் என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் அனுப்பின செய்தியில், வெளிப்படையாக எந்த விதமான துரிதமும், கோரிக்கையும் இருக்கவில்லை. இயேசுவின் நெரு௺கிய நண்பனை பற்றி ஒரு தகவல் மட்டும் அனுப்பப்பட்டது. ஒரு வேளை அவருடைய நண்பன் மேல் உள்ள அக்கறையினால், இயேசு வருவார் என்று அவர்கள் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும்.

இயேசுவுக்காக, அந்த சகோதரிகள் வழி மேல் ஒரு விழியை வைத்திருந்தார்கள். "இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்" (யோவான் 11:4) என்ற வாத்தைகளை மட்டுமே ஒரு செய்தியாளர் கொண்டுவந்தார். லாசரு மீண்டும் உடல் நலம் பெறுவார் என்பதை இந்த வார்த்தைகள் குறிப்பிடுவதாக எண்ணி, அந்த சகோதரிகள் உற்சாகமடைந்திருப்பார்கள்.

இயேசு இரண்டு நாட்கள் அ௺கு த௺கினார். அதற்குபின் அவர் எருசலேமுக்கு திரும்பினார். "அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார்.அதற்குச் சீஷர்கள்: ரபீ, இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப்

போகலாமா என்றார்கள்." (யோவான் 11:7,8) எதிரில் ஆபத்தை தவிர வேறு எதையும் காணாத சீஷர்கள் தங்களுடைய ஆண்டவரின் பாதுகாப்பை குறித்து கவலைகொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களின் பயத்திற்கு இயேசு பதில் அளித்தார். "இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு, மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான். ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான் என்றார்." (யோவான் 11:9-10) அவருடைய ஜீவன் பிதாவின் கைகளில் இருப்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். மற்றும் அவர் குறித்த நேரத்தில், அவருடைய ஜீவனை அனைவருக்கும் ஈடு பலியாக கொடுக்கவேண்டிய நேரம் நெருங்கியிருந்தது. அவர் ஆயத்தமாக இருந்தார். ஆனால் அவருடைய ஊழியத்தின் போது மிகப்பெரிய அற்புதத்தின் வழியாக அவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்த வேண்டியதாக இருந்தது.

"இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்.அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி" (யோவான் 11:11-14) இயேசு எவ்வளவு மென்மையை காட்டினார், அவருடைய வார்த்தைகள் முழுமையாக அனுதாபம் நிறைந்ததாக இருந்தது. ஆனால் ஒரு குடும்பம் ஒருவரை இழந்துவிட்டது என்பதை மறந்தவராக, தங்களுடைய எஜமான சந்திக்கவேண்டிய ஆபத்துகளை குறித்து சீஷர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். லாசரு மரித்துபோனதை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அவருடைய வருகையை தாமதிக்கவேண்டும் என்று அவர் எடுத்த தீர்மானம், அந்த குடும்பத்திற்கு எவ்வளவு வேதனையை தந்திருக்கும் என்று இயேசு நன்கு அறிந்திருந்தார். ஆனால் இறுதி முறையாக, அவருடைய பிதா அவருக்கு மரணத்தின் மேல் அதிகாரம் கொடுத்திருந்தார் என்பதை செய்து காட்டக்கூடிய ஒரு உயர்வான நோக்கம் இருந்தது.

இயேசு வந்தபோது, மார்த்தாளும், மரியாளும் அழுதுகொண்டிருப்பதை அவர் கண்டார். இயேசுவுக்காக மார்த்தாள், தன்னுடைய கண்களை துடைத்துகொண்டு, அவளுடைய சகோதரன் மீண்டும் உயிர்த்தெழுவார் என்று கூறி அவளுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும்படியாக இயேசுவுக்கு பதிலளித்தாள். "உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றான். "(யோவான் 11:24-27)

லாசருவை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று இயேசு கேட்டார். அவர் சென்றபோது, மார்த்தாள், மரியாளுடன் ஒரு திராளகூட்டம் அழுதுகொண்டிருப்பதை அவர் கண்டார். இந்த விசேஷித்த குடும்பம் மற்றும் அவர்களின் நண்பர்களின் வியாகுலத்தை கண்டு, இயேசு ஆவியில் கலங்கினார். இயேசுவின் மென்மையை எளிமையான இரண்டு வார்த்தைகளை கொண்டு யோவான் சாட்சிகொடுத்தார். "இயேசு கண்ணீர் விட்டார்" (யோவான் 11:35) இயேசுவின் முகம் மாறியதை கண்ட பார்வையாளர்கள் மனம் கலங்கினார்கள். "அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்!

" (யோவான் 11:36) இந்த வசனங்களில் "அழுகை" என்ற வார்த்தைகளில் காணப்படும் வித்தியாசத்தை பேராசிரியர் ஸ்டிராங்ஸ் குறிப்பிடுகிறார். பார்வையாளர்களின் அழுகை (ஸ்டிராங்ஸ் 2799) என்பதற்கு உரத்த சத்தத்தோடு ஓலமிட்டு துக்கிப்பது. இயேசு கண்ணீர் விட்டார் என்பதற்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தையின் பொருள், "அமைதியாக அழுகுவது அல்லது கண்ணீர் சிந்துவதாகும்."

கல்லறையின் கல்லை எடுத்துபோடும்படி இயேசு கல்லறை பாதுகாவலர்களிடம் கூறினார். அவளுடைய சகோதரன் மரித்து நாலு நாள் ஆயிற்று என்றும் அவருடைய சரீரம் அழிய துவங்கியிருக்கும் என்றும் மார்த்தாள் எச்சரித்தாள். "இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச்

செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி:இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்"(யோவான் 11:40-44)

லாசரு ஜீவ சுவாசம் இல்லாதவராக இருந்தார் என்பதற்கு எந்த சந்தேகமும் அ்கு அவர்களுக்கு இருந்திருக்காது. அவருடைய கட்டுகளோடு, லாசரு கல்லறையிலிருந்து வெளிப்பட்டார் - அவர் இன்னும் ஆதாமின் மரண தீர்ப்பில் இருப்பதாகவும், அவருக்கு இன்னும் இந்த கட்டுகள் தேவையாக இருப்பது போல, இது சித்தரிக்கலாம். இயேசு உயர்த்தெழுந்த போது, அவரை சுற்றியிருந்த சீலை துணி மற்றும் அவருடைய முகத்தை சுற்றியிருந்த சீலை துனியும் ஒரு இடத்தில் இருந்தது. அவருடைய பூமிக்குரிய வாழ்க்கை முடிவடைந்தது. மற்றும் அவருடைய புதிய சரீரம் ஆவியாயும், அழியாமையுமாக இருந்தது. (1கொரிந்தியர் 15: 45)

## இயேசுவின் இறுதி நாட்கள்:

இயேசுவின் சீஷர்களின் சொந்த வாழ்க்கையில் மாற்ற்களை ஏற்படுத்த,லாசருவின் மரணம் மற்றும் உயிர்ப்பித்தல், உதவியாக இருந்தது. வெகுசீக்கிரத்தில், இயேசு இனி அவர்களிடத்தில இல்லாதபோது, அவர்கள் முழுமையாக யெகோவா தேவன் மேல் சார்ந்திருக்கவேண்டியவர்களாக இருந்தார்கள். தீர்க்கதரிசன்களின் படி இயேசு பாடுப்பட்டு, மரிக்கவேண்டும் என்று அவர் அறிந்திருந்தாலும்,(ச்கீதம் 22) அதை சீஷர்கள் அறியவில்லை. ஆயினும், அவரோடு மரிக்க, அவர்கள் ஆயத்தமாகவும், த்களுடைய இருதயத்தில் முழுவிருப்பத்துடனும் இருந்ததை இயேசு கண்டார். (யோவான் 11:6) பின்னர், அவர்கள் அனைவரும் அவரைவிட்டு விரைந்தோடுவதற்கு முன், அவர்களின் வலிமைக்காக அவர் ஜெபித்தார். (யோவான் 17:13-21)

மரணம் பெரும் சோகம்.துரதிர்ஷ்டம் நல்ல நாட்களுக்கு வழிநடத்தும். நோய் சுகம் பெறுவதற்கு வழிநடத்தும். ஆயினும், மரணம் ஒரு உச்சபட்சமான துக்கம்.இது எல்லா நம்பிக்கைகளையும், கனவுகளையும் வாய்ப்புகளையும் முடிவுக்கு கொண்டுவரும். வாழ்நாள் உறவுகளை திடீரென முறித்துவிடும். மரணத்தில் மற்றவர்களை இழந்தவர்களுக்கு வேதாகமம் மட்டுமே நம்பிக்கை அளிக்கிறது. "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." (ஓசியா 13:14) அவருடைய மரணத்தில், ஆதாமின் சந்ததி, மரண சாபத்திலிருந்து அகற்றபடுவதற்கு இயேசு தேவையான ஈடுபலியை அளித்தார். அவருடைய உயிர்த்தெழுதலில், இதுவரையில் வாழ்ந்த அனைவரும், நோயற்ற, மரண அச்சுறுத்தல் இல்லாமல், வாழ்வதற்கான ஒரு வாய்ப்பை கொடுப்பதற்கு வழியை இயேசு பெற்றுகொண்டார். (1தீமோத்தேயு 2:6)

லாசரின் உயிர்ப்பித்தல், அ்கிருந்த அனைவருக்கும் மிகுந்த சந்தோஷத்தை அளித்திருக்கும். மரித்தோரின் உயிர்த்தெழுதல் துவ்கும்போது, த்களால் அதிகமாக நேசிக்கப்பட்டவர்கள் மரணத்திலிருந்து திரும்பும்போது, அவர்களை காண்பவர்கள் பெறக்கூடிய மகிழ்ச்சியை எண்ணிபாரு்கள். (1கொரிந்தியர் 15:20-22) பிறகு, ஆனந்த கண்ணீர் வழியும். அந்த நாளை நாம் எதிர்நோக்குவோமாக !

ஒருமித்து நினைவுக்கூறுதல்

# நினைவுகூருதலின் கொள்கைகளை கௌரவித்தல்



"இதை என் நினைவாக செய்யுங்கள்." (லூக்கா 22:19)

Tom Ruggirello

நம்முடைய ஆண்டவரின் மரணத்தை நினைவுகூருதலை அநுசரிப்பதற்கு நாம் ஒருமித்து கூடிவருகையில், அவருடைய அன்பார்ந்த பலியை ஒரு விசுவாசிகளின் கூட்டமாக நம்முடைய உண்மையான பாராட்டை தெரிவித்துகொள்கிறதற்கு நமக்கொரு வாய்ப்புகொடுக்கிறது. ஒரு சரீரமாக, இதை நாம் செய்யும் போது, பொதுவாக நாம் பெற்ற மிகப் பெரிய காரிங்களை இது வலியுறுத்துகிறது. இது நம்முடைய விசுவாசத்தின் வேருக்கும், நாம் தேவனுக்கு முன் முழுமையாக நீதிமானாக்கப்பட்டு குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும், எவ்வாறு, எப்படி நிற்க முடியும் என்பதற்கான மிக பெரிய சத்தியத்திற்கும் நம்மை அழைத்துசெல்கிறது. நாம் அவரை நினைவுக்கூருகையில், இப்படிப்பட்ட இனிமையான பலியை செலுத்துவதற்கு அவரை இழுத்து சென்ற கொள்கைகளையும் நாம் நினைவுக்கூருகிறோம்.

நீதிமொழிகள் 8:31ம் வசனம், நம்முடைய ஆண்டவர் மனிதனாக வருவதற்கு முன்னிருந்த அனுபவங்களின் அவருடைய உணர்வுகளை அளிக்கிறது. "அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்துகொண்டிருந்தேன்." நம்முடைய பரலோக தகப்பன், நம்முடைய இனத்திற்கு இரட்சகராக ஆகும்படி அவரிடம் கேட்டுகொண்டபோது, சந்தேகமின்று, அவர் எந்தவிதமான ஒத்திவைப்பும் இல்லாமல் ஏற்றுக்கொண்டார். இவ்வாறு, நாம் அவரை நினைவுக்கூரும்போது, அவரை உந்தின மிக சிறந்த அன்பின் கொள்கையையும் நாம் நினைவுக்கூருகிறோம்.

ஆனால் அவருடைய தந்தைக்கான அன்பையும் அவர் கொண்டிருந்தார். "நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்தது, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்." என்று (நீதிமொழி 8:30ல்) அவர் கூறினார். (மத்தேயு 17:5ம் வசனத்தையும் காண்க) பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையில் உள்ள இந்த பந்தத்தில், ஒரு நெருங்கிய நட்பு காணப்படுகிறது. தேவனுடைய சிருஷ்டிப்பின் திட்டங்களுக்கு உயிர்க்கொடுப்பதற்கு, இருவரும் ஒருமித்து கிரியை செய்யும்போது, இது இவர்கள் இருவருக்குமே மிகுந்த மகிழ்ச்சியை கொண்டுவந்தது.

படைப்பின் வேலைகள் முடிந்தபின், நிறைவேற்றுவதற்கு மற்றொரு வேலை இருந்தது. ஒரு புத்திசாலி சிருஷ்டியை, நன்மை மற்றும் தீமையைப் பற்றிய அறிவில் கற்பிக்கவேண்டிய மிக பெரிய வேலையாக இருந்தது. பல வழிகளில், இது மிக கடினமானது, சிருஷ்டிப்பின் பகுதியில் மிக சிக்கலானதுமாகவும் இருந்தது. இந்த செயல்முறை முதல் பரிட்சையோடு துவங்கியது. "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." ( ஆதியாகமம் 2:17) இந்த எளிய கற்பனையை கீழ்படிவதில் தோல்வி அடைந்ததினால், இந்த பிரபஞ்சம் எப்போதும் காணவிரும்பும், மிக பெரிய கற்றுகொள்ளக்கூடிய அனுபவம் துவங்கியது. தேவனுடைய உயர்வான பலியை சார்ந்த ஆடாவதற்கு அவருடைய அன்பே நம்முடைய ஆண்டவரை அசைய செய்தது. அவர் செய்த ஒவ்வொரு காரியங்களிலும் இந்த ஒரு கொள்கை ஆழமாக பதிந்திருந்தது.

இயேசுவை நினைவுக்கூருகையில், நாம் நீதி மற்றும் நியாயமான கொள்கைளை கௌரவிக்கிறோம். இரண்டு காரணங்களுக்காக, ஒரு நீதியுள்ள வாழ்க்கையை அவர் இங்கு வாழ்ந்தார். முதலாவது, அவருடைய ஜீவனை ஈடு கிரையமாக கொடுப்பதற்கு தகுதிபெற, அவருடைய தனிப்பட்ட நீதி தேவைப்பட்டது. இரண்டாவதாக, அவருடைய நல்லொழுக்கம் (தார்மீக சிறப்பம்சங்கள்) கடவுளின் உண்மையான அறநெறியின் தரநிலைக்கு செயல் விளக்கம் அளித்தார்.

அவரை நினைவுக்கூருகையில், நாம் இந்த நன்மையானதும், மேன்மையானதுமான கோட்பாடுகளை நினைவில் கொள்கிறோம். நம்முடைய வருடாந்தர கூடுகையில்,அந்த இரவு மிக முக்கியமானது. ஆயினும்,அவருடைய மாதிரியை பின்பற்ற, நம்முடைய வாழ்கையில் ஏற்படும் முற்றிலுமான மாற்றத்திற்குபின் உள்ள விலைமதிப்பற்ற வாழ்க்கையில், அநுசரிக்கப்படும் நினைவுகூருதல் இன்னும் அர்த்தமுள்ளதாக திகழும். மீதியுள்ள வருடம் நாம் வாழக்கூடிய வாழ்க்கை, நாம்

கடந்த அந்த இரவு ஒரு சம்பிரதாயமாக இராமல், இயேசு நம்முடைய இருதய ்களில் ஆழமாக வேர்விட்டிருக்கிறார் என்று நாம் அறிவிக்கலாம்.

நம்முடைய கிரியைகள் மற்றும் உள்நோக்க ்கள் அவரை பின்பற்றி, மற்றவர்கள் நம்மை காணும்போது, அவர்கள் இயேசுவின் பிரதிபலிப்பை நம்மிடம் காணும்படி, நம்முடைய வாழ்க்கையே அவருக்கு ஒரு ஜீவனுள்ள நினைவுகூருதலாகும். இவ்வழியில், நாம் அவரது சிறந்த ஜீவனுக்கும், மரணத்திற்கும் ஒரு அனுதின நினைவுகூருதலாக இருக்கலாம்.

## புதிய துவக்கங்கள்:

பஸ்காவை அனுசரிப்பதற்கு,தேவனுடைய கட்டளைகள் மிக எளிமையுள்ள கற்பனையோடு துவ ்குகிறது. "இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக. " (யாத்திராகமம் 12:2) பஸ்கா நியமனத்திற்கு முன், செப்டெம்பர் மாதத்தை சுற்றி, யூத வருடம் விழ துவ ்கியது. முதல் பஸ்கா, முதல் மாதம், வசந்த காலத்தில் துவ ்கவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார். பஸ்கா ஒரு புதிய துவக்கத்தை குறிக்கக்கூடியதாக இருந்தது. இது ஒரு பிரமாதமான மாற்றம். இயேசு அவரையே ஈடுபலியாக ஒப்புகொடுத்து, மனுக்குலத்திற்கு ஒரு புதிய துவக்கம் இருப்பதற்கு உத்தரவாதம் அளித்தார். மேலும், ஏதேனில் முதல் துவக்கம், நம்முடைய இறுதி நம்பிக்கை அல்ல என்பதையும் காண்பித்தார்.

நாம் இரத்தத்தின் கீழ் வரும்போதும், முதல் பேரானவர்களின் பகுதியாக மாறும் போது, இந்த யுகத்தில் அர்ப்பணிக்கப்பட்டவர்களின் புதிய துவக்கம் ஆரம்பிக்கிறது. பிறகு வசந்தகாலத்தின் புதிய வளர்ச்சி துவ ்கும். இப்போது நாம் நம்முடைய முந்தைய அனுபவ ்களை திரும்பி பார்த்து, நாம் பாவம் மற்றும் மரணத்தின் கட்டுகளில் இருந்ததை நினைவுக்கூரலாம். எகிப்தில், மண்ணினால் செ ்கள் செய்யும் வேலைக்கு அடிமைகளாக இருந்த இஸ்ரயேலர்களுக்கு விடுதலை கிடைத்ததுபோல, நம்முடைய நிஜமான பஸ்கா ஆடு இவைகளிலிருந்து நமக்கு விடுதலை தந்துவிட்டார். நாம் "கடந்து விட்டோம்" (யாத்திராகமம் 12:27) இப்போது, மரணதீர்ப்பிலிருந்து விடுதலைப் பெற்றுள்ளோம். வசந்த காலத்தில் புதிதான ஜீவனை காண்பிக்கும் படியாக புதிதான பூக்களும், பசுமையான புல்லும் முளைக்கிறது போல, இப்போது புது சிருஷ்டி வளர்ந்து செழிக்கலாம். நம்முடைய புதிய துவக்கம் ஐசுவரியமுள்ள ஆவிக்குரிய வளர்ச்சியை கொண்டுவரும்.

## நெருப்பினால் சுடப்படுதல்

பஸ்கா ஆடு நெருப்பினால் சுடப்படவேண்டும். இந்த சக்திவாய்ந்த சித்திரம், இந்த பூமியின் மேல் இயேசுவின் அனுபவத்தின் தீவிரத்தன்மையை காட்டுகிறது. இதை முழுமையாக அறிந்திருந்த அப்போஸ்தலனாகிய பவுல்,"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபிரெயர் 12:3) பெரும் பாதகசெயல்களை இயேசு சகித்தார்.

உடல் ரீதியான துஷ்பிரயோக ்கள் இருந்தபோதிலும், ஆலோசனை ச ்கத்திற்கு முன் அல்லது கசையடியிலும் மற்றும் சிலுவையில் அறைப்படும்போதும், அவருடைய துன்பத்திற்கும் துயரத்திற்கும், கொடுமையாக நடத்தப்பட்டதற்கும் எல்லை இல்லாதிருந்தது. அவருடைய பிதா அவரை விட்டு முகத்தை திருப்பியபோது, உணர்வுப்பூர்வமான துக்கத்தை சகித்தார். (இயேசு சிலுவையில் தொ ்கிய போது, தேவன் தம்முடைய முகத்தைத் திருப்ப வில்லை என்று யோவான் 8:29, ச ்கீதம் 22:24 மற்றும் ச ்கீதம் 23:4 வசன ்கள் குறிப்பிடுவதாக சில பதிப்பாசிரியர்கள் கூறுகிறார்கள். ) பலருக்குள் அவிசுவாசத்தை அவர் கண்டபோது அவருடைய இருதயம் பாடுப்பட்டது. தன்னுடைய இரட்சகரின் சீஷனாவதை காட்டிலும் ஆஸ்தியை அதிக பொருட்டாக எண்ணினதை கண்டு இயேசு துக்கம் அடைந்தார். பேராசையும் பொறாமையும் கொண்ட யூத மதத்தலைவர்கள் அவருக்கு விரோதமாக பிரச்சனைகளை உருவாக்குவதை கண்டு அவருடைய இருதயம் வேதனை அடைந்தது. இவைகள் அனைத்தும் நம்முடைய ஆண்டவருக்கு வேதனையான அனுபவ ்கள். அவருடைய கெத்சமனே பாடுகளை, சீஷர்களாலும் கூட இலகுவாக்க முடியவில்லை. நேசிக்கப்பட்ட ஒரு நண்பனின் துரோகம், அவருடைய இருதயத்தில் விழுந்த ஒரு அக்கினி சுடராக இருந்தது. இவை அனைத்தும், நம்முடைய ஆண்டவரின் உபத்திரவத்தின் பாத்திரமாக இருந்தது. நெருப்பினால் சுடப்பட்ட காரியம், அவருடைய அனுப ்களுக்கு பொருத்தமாக உள்ளது.

## அவர் தமது முகத்தை ஒரு கற்பாறையைப் போலாக்கினார்:

"அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை." (ஏசாயா 50:6) இவ்வளவு

புகழ்ச்சிக்கு பாத்திரமான ஒருவர், முகத்தில் உமிழப்படுவதையும், தாடி பிடு கப்படுவதையும் எண்ணினால், மிக கடினமாக உள்ளது. அவரை கீழ்தரமாக நடத்தவும், அவரை பரியாசம் செய்யவும், இப்படிப்பட்ட அநீதியான செயல் நடத்தப்பட்டது. ஆனால், ஏசாயா 50ம் அதிகாரத்தின் அடுத்து வரும் சில வசன களில், இத்தகைய பய கரமான தருணத்தை இயேசு எவ்வாறு கையாண்டார் என்பதை காணலாம். நியாயமற்ற ஏச்சுபேச்சுக்களை சமாளிக்க குறிப்பிட்ட மாதிரியை அவர் விட்டு சென்றார்.

"கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன்.என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார்; என்னோடே வழக்காடுகிறவன் யார்? ஏகமாய் நிற்போமாக, யார் எனக்கு எதிராளி? அவன் என்னிடத்தில் வரட்டும்." (ஏசாயா 50 :7,8)

அவர் தவறாக நடத்தப்படும்போது, இயேசு தன்னுடைய சிந்தையை தேவன் பக்கமாக திருப்பினார். அவருடைய முகத்தை கற்பாறையை போலாக்கினார் என்பதற்கு,ஏசுபவர்களினால் தன்னுடைய திடமான உணர்வுகள் அசைவதற்கு அவர் அனுமதிக்காமல் இருப்பதை பொருள்படுத்துகிறது. " என்னை அவமானப்படுத்தும் முயற்சிகளுக்கு நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்" என்று அவர் சிந்தித்தார். தேவன் அவருடைய வாழ்க்கையை நியாயந்தீர்க்கையில், விழுந்துபோன மனுஷனுக்கு முன் அவருடைய அனுபவ களை காட்டிலும், அதன் விளைவுகள் மிகவும் வித்தியாசமாக இருக்கும் என்று அவர் அறிந்திருந்தார். தேவன் மேலுள்ள நம்பிக்கையே, இப்படிப்பட்ட பய கரமான எதிர்ப்புகளை சகிப்பதற்கு உதவி செய்தது. முடிவில் நீதியுள்ள நியாயத்தீர்ப்பினால் அவர் நியாயமாக கௌரவிக்கப்படுவார் என்பதை அவர் புரிந்துகொண்டார்.

**சங்கீதம் 22** இந்த ச கீதம் இயேசுவின் மனதில் இருந்தபடியால், அவர் சிலுவையில் தொ கியபோது, திடீரென்று " என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்" என்று முதலாம் வசனத்தை மேற்கோல் காட்டினார். மேலும், "எல்லாம் முடிந்தது" என்று அவர் சொன்ன இறுதி வார்த்தைகள், இந்த ச கீதத்தின் முடிவு சொற்றொடருக்கு ஒத்திருப்பது கவனிக்கதக்கது. (யோவான் 19:30)

" ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்.அவர்கள் வந்து; அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப் போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்." (ச கீதம் 22:30-31) "அவரே இவைகளைச் செய்தார்" என்பதும் "எல்லாம் முடிந்தது" என்பதும் ஒரே பொருளையுடையதாக இருக்கிறது என்று கம்பானியன் பைபில் (Companion Bible)கருதுகிறது. அதற்குபின் பரிசுத்தவான்கள், அவரது நீதியை வரு கால தலைமுறையினருக்கு அறிவித்ததையும், நம்முடைய மீட்புக்கு தேவையான பலியை அவர் நிறைவேற்றினதையும், அவர் தீர்க்கதரிசனமாக கண்டார்.

இயேசு சிலுவையில் தொ கியபோது, இந்த முழு ச கீதத்தையும் அவர் ஒப்புவித்தது போல் தோன்றுகிறது. ஆறு மணி நேரம் சிலுவையில் தொ கியபோது அவர் அனுபவித்த கடுமையான வேதனைகளை தா கி கொள்ள, அவருடைய சிந்தையை நிரப்பின அவருடைய சொந்த அனுபவ களாகிய தீர்க்கதரிசன வார்த்தைகளே, அவருக்கு உதவியாக இருந்திருக்கவேண்டும். ச கீதத்தின் இந்த பகுதிகளை நாம் வாசிக்கும்போது, அவருடைய சரீரம் எதிர்ப்பார்த்த நீடித்த இடைநிறுத்தமும்.நொடிபொழுது ஓய்வையும் குறித்து நாம் கற்பனை செய்து பார்க்கலாம். சில வசன கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்? என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை. இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கைவைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன். என்னை விட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை.தண்ணீரைப்போல் ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று.நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். என்

எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்; அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

" என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள். ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்; என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள். உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர். "

"பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்து கொள்வார்கள்; புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள். ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே.ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்.அவர்கள் வந்து; அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப் போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள். " (சங்கீதம் 22-1-4, 6,11,14,16-19,22-24,27-31)

இந்த வார்த்தைகள் இயேசுவின் பாடுகளை மட்டுமல்ல, அந்த பாடுகளின் மத்தியில் அவருடைய விசுவாசத்தின் வலிமையையும் காட்டுகிறது. இனி பிறக்கக்கூடிய தலைமுறைகளும் கூட தேவனுடைய நீதியை கேட்பார்கள் என்று இயேசு மிகுந்த ஆறுதலடைந்தார். இந்த அற்புதமான தீர்க்கதரிசன சங்கீதத்தில், பாதகமான சூழ்நிலையிலும், விசுவாசத்தை எப்படி கையாளவேண்டும் என்ற ஒரு மாதிரியை இயேசு விட்டு சென்றிருக்கிறார். அவரின் சொந்த போராட்டத்தின் போது அவர் பிதாவிடம் சென்றார். அவர் உதவி கேட்டு, வாக்குத்தத்தங்களை கோரினார். வரக்கூடிய இராஜ்யத்தை பற்றியும், அங்கு தேவனுடைய நாமத்தை அறிவிக்க ஒரு சந்ததி இருக்கும் என்பதை அறிந்துகொள்ள தைரியம் கொண்டார். தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதே அவருடைய முதன்மையான அக்கறையாக இருந்தது. இந்த முன்னோக்குடன், உயர்வான மற்றும் மேன்மையான கொள்கைகளின் மேல் கவனம் வைத்ததால், இதினிமித்தம் அவர் உடல்ரீதியாக பட்ட பாடுகளை சகித்தது மதிப்புள்ளதாக இருந்தது. இந்த சங்கீதம் சிலுவையில் தொங்கிய இயேசுவின் சில சிந்தனைகளை வெளிப்படுத்தியதால், அவர் சங்கீதம் 23 யும் தொடர்ந்து பேசுவதற்கும் சாத்தியம் உண்டு. ஏனெனில், அவற்றில் சில இதுவரை எழுதப்பட்ட மிக அர்த்தமுள்ள வார்த்தைகளாகும். இந்த வார்த்தைகள் நம் ஆண்டவருக்கு ஆறுதல் அளித்திருக்கும் என்று சிந்திப்பதற்கு எவ்வளவு அற்புதமாக உள்ளது.

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்."

முதுகு சிதைந்து, வெட்டு காயங்களோடும், கால்கள் மற்றும் கைகளை ஆணிகள் கிழித்துகொண்டு, சுவாசிப்பதற்கு போராடிக்கொண்டிருந்தாலும், நம்முடைய ஆண்டவராம் இயேசு "நிச்சயமாக என்னுடைய வாழ்க்கையில் நன்மையும் கிருபையும் என்னை தொடரும்.." மற்றும் "நான் மரண இருளின் பள்ளதாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். " என்று அவர் நம்பிக்கையோடு சொன்னார். இந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகளை நாம் சிந்திக்கையில், அவருடைய விசுவாசம் நமக்கு உண்மையில் ஊக்கமளிக்கக்கூடியதாக உள்ளது.

## ஒரு எலும்பும் உடையவில்லை :

பஸ்கா ஆட்டின் எலும்புகள் முறிக்கப்பட கூடாது என்ற உண்மையே, பஸ்காவின் ஒரு புதிரான அம்சமாக உள்ளது. (யாத்திராகமம் 12:46) இது யோவான் 19:33,34ல் நிறைவேறியது.. ""

இயேசுவின் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படக்கூடாதென்று சொல்லப்பட்டதன் முக்கியத்துவம் என்ன ? இதற்கான பதிலை 34ம் ச ்கீதத்தில் காணலாம். "அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது. "முறியாத எலும்புகள், விடுதலையின் நம்பிக்கையை அடையாளப்படுத்தும் என்று ச ்கீதக்காரன் கூறுகிறார். இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்ட்டபோது, விடுதலைக்குரிய அவருடைய நம்பிக்கை உண்மையானது. மீட்கும் பொருளை வழ ்குவதற்கான அவருடைய நம்பிக்கை வீணாக போகவில்லை. அவர் கால் எலும்புகளை முறிப்பதற்கு முன் இயேசு மரித்துவிட்டார். அவருடைய நம்பிக்கை உண்மையானது என்பதற்கும், இனி அவருடைய எதிரிகள் அவரை அழிக்க முடியாது என்பதற்கும் தேவன் ஒரு அறிகுறியை கொடுத்தார்.

நாம் கூட முறியாத எலும்புகளை பெற்றுள்ளோம். ஒப்புரவாக்குதலின் செயல்பாடுகள் எவ்வாறு கிரியை செய்கிறது என்ற நம்முடைய புரிந்துகொள்ளுதலின் வழியாக நமக்கு மிகுந்த நம்பிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷய ்களை தெரிந்துகொள்வது, என்ன ஒரு ஆசீர்வாதம் மற்றும் பாக்கியம். "அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. "(எபிரெயர் 6:19) என்று பவுல் கூறும்போது, அந்த நம்பிக்கை வழ ்கும் உறுதிப்பாட்டை விவரிக்கிறார். இது "நிலையானதும், உறுதியானதுமாக உள்ளது."

## இது நினைவுகூரத்தக்கது

நம்முடைய ஆண்டவரின் ஈடுபலியை நாம் நினைவுகூருகையில், அவர் கைக்கொண்ட கொள்கைகளை நாம் கௌரவிக்கிறோம். அவருடைய பலி, அன்பின் மிகுதியான வெளிப்பாடாக இருந்தது. அவருடைய பரிபூரணம் தேவனுக்கு நீதியுள்ள காணிக்கை கொடுத்தது. நமக்கு பரிபூரணமான கீழ்படிதலுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியை வைத்தது. ஒடுக்குமுறையின் அனலை அவர் சகிக்கும்போது, அசைக்கப்படாமல் இருப்பதற்கு, உதவி வேண்டி தேவனிடமாய் திரும்பினார். அவருடைய பலியின் விளைவு, எவ்வளவு பெரிய நன்மையை கொண்டுவரும் என்றும் அவருடைய பிதா எவ்வளவு மகிமை அடைவார் என்பதையும் அவர் புரிந்திருந்தார். இந்த காரண ்களுக்காக, அவரை நாம் நினைவுகூருவது மிகவும் பாக்கியமுள்ளது.

............................

இன்றைய தீர்க்கதரிசனம்

# எருசலேம் போர்



"அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்." (சகரியா 12:3)

டிசம்பர் 6 -2017 ஆம் ஆண்ட "இஸ்ரயேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையிலான மோதலுக்கு ஒரு புதிய அணுகுமுறையின் துவக்கத்தை"அமெரிக்க ஜனாதிபதி டோனால்ட் டிரம்ப் அறிவித்தார். அவருடைய அறிக்கையானது 1995 அம் ஆண்டின் மறுபிரதியை உள்ளடக்கியது. "அமெரிக்க தூதரகத்தை எருசலேமிற்கு மாற்றவும் அந்த நகரத்தை இஸ்ரயேல் தலைநகரமாக அங்கீகரிக்கவும்" மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி அமெரிக்க காங்கிரசால் எருசலேம் தூதரக சட்டம் இயற்றப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக, இந்த சட்டத்தை ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கும் தள்ளிவைப்பதையே ஒவ்வொரு அமெரிக்க ஜனாதிபதியும் மேற்கொண்டு வந்தனர். இந்த சட்டத்தை இயற்றவதற்கான தனது முடிவை ஜனாதிபதி டிரம்ப குறிப்பிடுகையில் "இஸ்ரயேல் ஒரு இறையாண்மை தேசமாகும். அதன் சொந்த தலைநகரத்தை நிர்ணயம் செய்ய மற்ற இறையாண்மை தேசத்தை போல் அதற்கும் எல்லா உரிமையும் இருக்கிறது என்றார்.

எல்லைகள் பற்றிய சர்ச்சையால் ஏற்பட்ட முடிவு இது அல்ல என்பதை ஜனாதிபதி டிரம்ப் ஒப்புக்கொண்டார். இருப்பினும், ஐநா பொதுச் சபை டிசம்பர் 21-2017 அன்று அவர் பிரகடனத்தை நிராகரித்தது. அதற்கு எதிராக வாக்களித்தது. எந்த வாக்கு எந்த சக்தியையும் கொண்டிருக்கவில்லை என்றாலும் எருசலேமை சுற்றியுள்ள அரசியலின் உணர்ச்சியை வெளிப்படுத்தியது.

**நவீன மோதல் :**

எருசலேம் முப்பத்தி ஆறு போர்களை சந்தித்துள்ளது. பதினேழு முறை சாம்பலாக் கப்பட்டது, பதினெட்டு முறை உயர்ந்துள்ளது. இரத்தம் மற்றும் வீரமரணத்தால் பரிசுத்த மாக்கப்பட்டாள். அசீரிய போர் இரதங்களின் குளம்பு அதிர்வு அவளுக்கு தெரியும். முற்றுகையிட துடிக்கும் ரோம அரசாங்கத்தின் இயந்திரங்களால் அவள் பயமுறுத்தப்பட்டிருக்கிறாள். சலாடினின் படுகொலையின் வளைவுகள் இடும் இரைப்புகளை கேட்டிருக்கிறாள். சிலுவைப்போரில் இறந்தவர்களின் முனகல் செய்திகளை கேட்டிருக்கிறாள். இஸ்ரயேல் படையின் துப்பாக்கி சூட்டின் துன்பத்தையும் அனுபவித்திருக்கிறாள். உலகின் எந்த இடங்களிலும் காணப்படாத மனித மூர்க்க குணங்களை அவள் கண்டிருக்கிறாள்.

ஒரு நூற்றாண்டிற்கு முன்பு, நவம்பர் 2-1917 அன்று பால்ஙபர் பிரகடனம் மத்திய கிழக்கின் சுயவிவரத்தை மாற்றியது. 67 வார்த்தைகளை மட்டுமே உள்ளடக்கிய அதன் முக்கிய பத்தியே, நவீன இஸ்ரயேலுக்கு அடிதளம் அமைத்தது. இது யூதர்களுக்கு எருசலேமை மீண்டும் நிலைநாட்ட ஒரு நுழை வாயிலை ஏற்படுத்தியது.

நவம்பர் 29, 1947 அன்று ஐக்கிய நாடுகள் பாலஸ்தீனத்தை இரு மாநிலங்களாக பிரித்தது. ஒன்று அரபு மற்றொன்று யூத நாடு. ஆறு மாதங்களுக்கு பின்பு பிரிட்டனின் வெளியேற்றம், இஸ்ரயேல் அரசாங்கம் தன்னை ஒரு சுதந்திர நாடாக அறிவிக்க பெரிதும் உதவியது. பாபிலோனியர்கள் எருசலேமை அழித்து 2500 ஆண்டுகள் ஆகிவிட்டது. இஸ்ரயேலின் தற்காலிக தலைவரான டேவிட் பென் குரியன், மே 14-1948 ஆம் ஆண்டு நள்ளிரவு ஆவதற்கு இருண்டு மணி நேரத்திற்கு முன்பு, நேரடி வானொலி ஒலிப்பரப்பில், சுதந்திரத்தின் அறிவிப்பை மிக சத்தமாக அறிவித்தார். இஸ்ரயேல் நள்ளிரவுக்கு பிறகு ஒரு சுதந்திர நாடாக மாறும். சில மணி நேரத்திற்குள் அந்த புதிய நாட்டை அரபு லீக்கின் படைகளால் சூழப்பட்டது. விமானப்படை போர் விமானங்கள் மற்றும் குண்டுகள் ஏதும் இன்றி வெறும் மூன்று டாங்கிகளை மட்டுமே வைத்துகொண்டு இஸ்ரயேலிய சிப்பாய்கள் 74 அரபு குண்டு வீச்சாளர்களை கைப்பற்றினர். இஸ்ரயேல் தனது 600,000 ஜனத்தெகையில் ஒரு சதவீதத்தை இழந்தது.

நவம்பர் 28 ம் தேதி பல தவறான படைப்பிரிவுகளால் யுத்தம் முடிவடைந்தது இஸ்ரயேல் முன்ன விட அதிக நில கைளை உரிமையாக்கி கொண்டது. ஏப்ரல் 3-1949 அன்று கைப்பிரதி உடன்படிக்கை செய்து, உலகின் மிக புனிதமான நகரம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. ஒன்று யூதர் மற்றொன்று அரபு.

இரண்டு வருடத்திற்கு பின் - ஜூலை 1951ல் ஜோர்டானை சேர்ந்த மனனர் அப்துல்லா எருசலேமில் உள் ளஅல் - அக்சா மசூதியில் தொழுகைக்கு செல்லும் போது ஒரு தனி அரபு படைவீரரால் படுகொலை செய்யப்பட்டார். அரபு நாட்டை சோர்ந்த கிழக்கு எருசலேமில் வன்முறை வெடித்தது. அரபியர்கள் மற்றும் அரபியர்கள், அரபியர்கள் மற்றும் யூதாகளுக்கு இடையே, நீண்ட காலமாக இந்த போர் நடந்தது. பகைமை தீவிரம் அடைந்ததால், சிரியாவின் பாதுகாப்பு மந்திரி ஹபீஸ் அல் அசாத், எகிப்திய ஜனாதிபதி கமால் நாசரிடம், ஜோர்டனுடன் மூன்று வழி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு கேட்டார். நாசர் இதற்கு இசைந்து சீனாய் தீபகற்பத்தில் இருந்து, கடந்து பத்து ஆண்டுகளாக அகிருந்த ஐநா இராணுவக் குழுவை வெளியேற்றினார்.

சிறிது நாட்களிலேயே, புதிய முத்தரப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஒரு தேசம், உடனடிதாக்குதல் நடத்தியதை, இஸ்ரயேலின் புலனாய்வு துறை கண்டறிந்தது. ஜூன் 5, 1967 அன்று எகிப்திய இராணுவ தளகளுக்கு எதிராக ஒரு முன்னெச்சரிக்கை விமானத்தாக்குதலை ஆரம்பித்தது. யோசுவா எரிக்கோவை ஏழு நாட்களில் வென்றார். ஆனால் இஸ்ரயேல் வெறும் ஆறே நாட்களில் யோர்தான், சிரியா மற்றும் எகிப்தில் படைகளை கைப்பற்றினர். இஸ்ரயேல் போராளிகள் சீனாய் தீபகற்பம் (பின்னர் எகிப்திற்கு திருப்பி தரப்பட்டது), காசாபகுதி, யூதேயா மற்றும் சமாரியா (மேற்கு கரை) ஜோர்டான் ஆறு, ஜெருசலேமின் பழைய நகரம் மற்றும் கோலன் குன்றை கைப்பற்றினர். ஆலய வளாகத்தின் மேற்கு சுவரை படையினர் அடைந்தபோது அவர்கள் கண்ணீர் விட்டு அழுது ஜெபிக்க ஆரம்பித்தார்கள். ரபிகள், ஷப்பரை தகர்த்தெரிந்தனர். கோவில் தளம் மீண்டும் யூத கைக்குள் வந்தது.

## எருசலேம் முதலில் இஸ்ரயேலின் தலை நகரமாகிறது :

"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், இதுவே எருசலேம், புறஜாதிகளின் நடுவிலே நான் அதை வைத்தேன், அதைச் சுற்றிலும் தேசங்கள் இருக்கிறது."(எசேக்கியேல் 5:5) 12 கோத்திர களை ஒன்றுபடுத்துவதற்காக தேவன் தாவீது இராஜாவை ஏற்படுத்தியபொழுது, பென்யமீன் மற்றும் யூதாவிற்கும் இடையே உள்ள எல்லைக்குள் நிர்வாக மையத்தை ஏற்படுத்த அவர் எருசலேமைத் தெரிந்தெடுத்தார். இதற்கு முன் வேதத்தில் எருசலேம் பற்றிய குறிப்புகள் மிக அரிதாக காணப்பபடுகிறது. கிமு 14 ஆம் நூற்றாண்டில், டெல் அமர்னாவில் கண்டெடுக்கப்பட்ட கடித கள் "யுரசாலிம் அரசரால்" கையெழுத்திடப் பட்டுள்ளது. இருப்பினும், எகிப்திய தாக்குதலை கொண்டிருக்கும் பதிவுகளில் இந்நகரம் குறிப்பிடபடவில்லை. யோசுவாவின் மரணத்திற்கு பிறகு யூதாவின் பிள்ளைகள் எருசலேமை நெருப்பினால் சுட்டெரித்தனர். (நியாயாதிபதி 1:8)

நியாயாதிபதிகள் 19:10-14ல் பெத்லகேமிலிருந்து வடக்கு நோக்கி பிரயாணம் மேற்கொண்ட ஒரு லேவியர், "எபூசியரின் நகரத்தில்" ஓய்வெடுக்க மறுத்துவிட்டார். அது "இஸ்ரயேல் புத்திரரின்" இடம் இல்லை என்று கூறினார். தாவீது இஸ்ரயேலை ஐக்கியப்படுத்தியபொழுது (11சாமுயேல் 5:1-2) அவர் எபூசியரிடமிருந்து எருசலேமைக் கைப்பற்றும்படி எபிரோனை விட்டு வெளியேறினார். "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், இதுவே எருசலேம், புறஜாதிகளின் நடுவிலே நான் அதை வைத்தேன், அதைச் சுற்றிலும் தேசங்கள் இருக்கிறது...... அந்தக் கோட்டையிலே தாவீது வாசம்பண்ணி, அதற்குத் தாவீதின் நகரம் என்று பேரிட்டு, மில்லோ என்னும் ஸ்தலந்துவக்கி, உட்புறமட்டும் சுற்றிலும் இருக்கிற மதிலைக் கட்டினான்." 11சாமுயேல் 5:7,9) எருசலேம் இஸ்ரயேலின் தலைநகரானது.

## கர்த்தரின் போராடிக்கும் களம்:

போர் வீரனாய் இருந்தபடியால், ஆராதனை செய்ய ஒரு ஆலயம் கட்ட தேவனால் தடைவிதிக்கப்பட்டிருந்தது. அவர் குமாரன் சாலமோனுக்கு அந்த வேலை நிர்ணயம் செய்யப்பட்டது. (11நாளாகமம 3:1) பலிபீடமும், ஆலயமும், "எபூசியனாகிய ஓர்னானின் களத்தின் மேல் கட்டப்படவிருந்தது. (1நாளாகமம் 21:18,22:1) ஒரு தேவதூதர் அவ்விடத்தில் ஒரு பலிபீடம் நிறுவுமாறு கட்டளையிட்டபோது தாவீது அதை வாகினார். (1நாளாகமம் 21:18-27) 11சாமுயேல் 24:18-25 ல் அந்த உரிமையாளரின் பெர் ஆருனா.

ஆர்னான் (அருனா) அந்த போரடிக்கும் களத்தை இலவசமாக வழ௰கினாலும், அதை முழு விலைக்கு வா௰குவதற்கே தாவீது வலியுறுத்தினார். "அதற்குத் தாவீதுராஜா ஒர்னானை நோக்கி: அப்படியல்ல, நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி, கர்த்தருக்குச் சர்வாங்க தகனத்தைப் பலியிடாமல், அதைப் பெறும் விலைக்கு வாங்குவேன் என்று சொல்லி,"1நாளாகமம் 21:24-25 அந்த நிலத்தின் உரிமை இஸ்ரயேலுக்கு மாற்றப்பட்டது. அந்த மலைமீது இருக்கும் ஆலயம் ஒரு முக்கிய ,இடமாக உள்ளது. அ௰கிருந்து தாவீதின் நகரத்தை காணமுடியும். மேலும் நகரத்தின் எல்லா இட௰களிலிருந்தும் அந்த ஆலயத்தை காண இயலும். இன்னும் கூட தாவீதின் நகரரிலிருந்து மலைமீது உள் ளஆலயத்தை காண மேல் நோக்கி கண்கள் ஈர்க்கப்படுகிறது.

வரலாற்று ரீதியாகவும், தீர்க்கதரிசன ரீதியாகவும் வேதாகமத்தில் கூறப்படும் அந்த போரடிக்கும் களம் மிக ஆழமான பொருளை உடையது. தானியத்தின் அரிகட்டுகள் திறக்கப்பட்டு, அதன் தண்டுகள் முழுவதும் களத்தில் பரப்பிவிடப்படுகிறது. கழுதைகள் எருதுகள் அல்லது குதிரைகளின் சோடிகள், போரடிக்கும் பலகைகளை இழுத்துக்கொண்டு, அதனை சுற்றி நடக்க விடுவார்கள். இதனால் தண்டுகளிலிருந்து தானியத்தை தனியே இழுத்தெறிந்த அதன் உமியிலிருந்து தானியத்தை தனியே எடுப்பார்கள். இந்த போரடிக்கும் பின், மரத்தினால் செய்த தூற்றும் முள்கத்தி அல்லது துற்றும் விசிரி கொண்டு, உடைந்த தண்டுகளையும், தானிய௰களையும் காற்றினுள் தூக்கி எரியப்படும். காற்றினால் அதில் இருக்கும் உமி பறந்து செல்லும். மேலும் சிறிய வைக்கோல் துண்டுகள் கீழே விழும் அதிக கனமுள்ள தானியம் கதிரடிப்பவரின் பாதத்தில் வந்து விழும். சளிப்பதன் மூலம் அந்த தானியத்தை மேலும் தூய்மை படுத்தலாம். இஸ்ரயேல் மீதான இயேசுவின் நியாயத்தீர்ப்பை யோவான் ஸ்நானகள் இதனுடைய தொடர்புபடுத்தினார். (மத்தேயு 3:12) இதே பதிவுகள் கிறிஸ்தவ மண்டலத்திற்கு அடையாளமாகவும் திகழ்கிறது. (வெளி 14:14-19)

போரடிக்ககும் களத்தில் நிகழும் நிகழ்வுகள் அனைத்தும், சுவிசேஷ யுகத்தின் இறுதி போரில் நடைபெறும் என்று மீகா தீர்க்கதரிசி கூறுகிறார். எசேக்கியேல் 38ல் இஸ்ரயேல் மற்றும் எருசலேமிற்கு எதிராக நடக்கும் நிகழ்வுகளையும் இதனுடனே ஒப்பிடுகிறார். "சீயோன் தீட்டுப்படுவாளாக, எங்கள் கண் அவளைக் காண்பதாக என்று சொல்லி, அநேக ஜாதியார் உனக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள்.ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள்; அவர் அரிக்கட்டுகளைப்போல அவர்களைக் களத்திலே சேர்ப்பார். சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்; நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய்; அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியைப் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும் நியமிப்பாய்."(மீகா 4:11-13) இந்த போரின் பின் விளைவுகளை விவரிக்க ஆபகூக் இதே மொழியைப் பயன்படுத்துகிறார்."நீர் கோபத்தோடே பூமியில் நடந்தீர், உக்கிரத்தோடே ஜாதிகளைப் போரடித்தீர்." (ஆபகூக் 3:12)

ஒரு முறை எந்தவித முக்கியத்துவமும் இல்லாத ஒரு நகரம், இன்று தீவிர சர்ச்சைக்குரிய பகுதியாக மாறிவிட்டது. தாவீது எருசலேம் நகரத்தை முற்றுகையிட்டு யூத மக்களுக்கான அந்த இடத்தை வா௰கிய போதிலும், இன்று பூமியிலுள்ள தேச௰கள் அதன் உரிமையாளரை மறுக்கின்றன. எனினும் இந்த உன்னதமாக இடத்தைப்பற்ற யெகோவா தேவன் அவருடைய சித்தத்தை அறிவிப்பார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவருடைய பிரசன்னம் அ௰கு உணரப்பட்டது. போரினால் ஏற்படும் விவாதத்திலிருந்த அதனை உயர்த்தி அவ்விடத்தில் எல்லா தேசத்தின் பாவ௰களையும் முறைப்படுத்துவார். பின்னர் பூமியில் தனது இராஜ்யத்தில் அவ்விடத்தை ஒரு பயிலும் இடமாக மாற்றுவார். "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."(ஏசாயா 2:3) நாம் அந்த இராஜ்யத்திற்காகவும், எருசலேமின் அமைதிக்காவும் ஜெபிப்போம். (ச௰கீதம் 122:6)

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள்**, திருச்சி.
**கைப்பேசி : 9244611241, 8122224919**